Registered as a Newspaper

A/L - 90
Weekend Classes
கலை, வர்த்தகம்
LOGIC 9-00
ECONOMICS 10-00
ACCOUNTS 11-00
TAMIL 11-00
COMMERCE 1-00
HINDUC ULTURE 1-00
NEW MASTER
INSTITUTE
1st Lane,
Power House Road,
JAFFNA.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

A/L - 89
Weekend Classes
கலை, வர்த்தகம்
LOGIC -8-00
ECONOMICS-I -9-00
ACCOUNTS -10-00
TAMIL 10-00
ECONOMICS-II-11-00
COMMERCE -12-00
HINDU CULTURE- 12-00
NEW MASTER
INSTITUTE
JAFFNA.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ ஆவணி ௴ 01 ௳ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 முஹர்ரம் பிறை 03 ( 17 - 08 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 159

# தெற்கில் பதற்றநிலை; தீவிர பந்தோபஸ்து!

## ஜே.வி.பியின் இரண்டு நாள் ஹர்த்தால் அறிவிப்பின் எதிரொலி

கொழும்பு, ஆக. 17

**தமிழ்ப் பகுதிகள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களில், இன்றும், நாளையும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே. வி. பி. யினர்) விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து பதற்ற நிலை உருவாகியுள்ளது.**

தென்னிலங்கையில் பந்தோபஸ்தும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு நாட்களிலும் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை நடக்குமா என்ற சந்தேக நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

இன்று புதன்கிழமையும், நாளை வியாழக்கிழமையும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஜே. வி. பி. இயக்கத்தினர் சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் சிங்களப்பகுதிகள் எங்கும் அறிவித்திருந்தனர்.

இந்த விடயத்தில் ஒத்துழைப்பு நல்காதோர் தண்டிக்கப்படுவர் என்ற தோரணையிலும் பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது.

அதனால் இன்றும், நாளையும் என்ன நிகழுமோ என்ற பதற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



எல்லாத்தையும் குழப்பி அடிச்சு மயக்கத்தைக் கொண்டு வாறதில சரியான முக்கூட்டுத்தான் லங்காபுவத்+ இலங்கை வானொலி+ ரூபவாஹினி! உது தெரிஞ்ச விஷயம் தானே...!

## நகை மீளளிப்பு நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 17

மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீளளிக்கும் மூன்றும் கட்டம் நேற்று ஆரம்பமானது.

கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதிக்கு முன்னர் பணம் செலுத்தியவர்களுக்கே நகைகள் தற்பொழுது மீளளிக்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரான்லி வீதிக் கிளையிலும், பிரதான வீதிக் கிளையிலும் நகை மீளளிப்பு வேலைகள் நடைபெறுகின்றன. (ஒ-க)

# தேடுதல், கைது செய்தலை ஆட்சேபித்து உண்ணாவிரதம்

## திருமலை நகரிலும் திரியாயிலும்

திருகோணமலை, ஆக. 17

திரியாய கிராமத்தில் அடிக்கடி இடம் பெற்று வரும்தேடுதல்வேட்டை, கைது செய்தல் ஆகியவற்றை ஆட்சேபித்தும், கைது செய்யப்பட்ட அப்பாவி மக்களை விடுதலை செய்யும்படி கோரியும், பெண்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

தினமும் நூற்றுக்கணக்கான பெண்கள் திரியாய் பிள்ளையார் கோவில் முன்றலில் கூடி உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களில் 11 பேர் கடந்த 15 நாட்களுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனராம். தடுப்புக் காவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஈரோஸ் இயக்க சென்னை அலுவலகம் மாத இறுதியில் மூடப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 17

சென்னை, கோடம்பாக்கத்தில் உள்ள ஈரோஸ் அலுவலகம் இந்தமாத இறுதியில் மூடப்படும்.

தமிழ்நாட்டில், குடிவரவு—குடியகல்வு திணைக்களத்தினர், உளவுத் துறையினர், பொலீஸார் ஆகியோர் கொடுத்து வரும் நெருக்கடிகள் காரணமாகவே அலுவலகம் மூடப்படவுள்ளதாக ஈரோஸ் பேச்சாளர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

1984 ஆம் ஆண்டு தொடக்கம் ஈரோஸ் இயக்கத்தின் அலுவலகங்கள் சென்னையில் பல இடங்களிலும் உத்தியோகபூர்வமாக இயங்கி வந்தன.

எனினும் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இலங்கை—இந்திய உடன்பாடு கைச்சாத்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் - வவுனியா பஸ் குடைசாய்ந்து ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஆக. 17

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று நேற்று பழைய முறிகண்டிக்கும் கொக்காவிலுக்கும் இடையில் குடைசாய்ந்தது.

அதனால் பிரயாணி ஒருவர் அந்த இடத்திலேயே மரணமானார். பத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 11-45 மணி அளவில் நடைபெற்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கிளி

(6ஆம் பக்கம் பார்க்க)

## காடுகளில் தேடுதல்!

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இந்திய அமைதிப் படையினர் தீவிரத் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர் என்று ஏஜன்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடர்ந்த காடுகளுக்குள் அமைதிப் படையினர் ஊடுருவித் தேடுதலை நடத்தி வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

# திருமலையில் குண்டு வெடிப்பு
# 9 பேர் மரணம்; 21 பேர் காயம்

கொழும்பு, ஆக. 17

திருகோணமலை காய்கறிச் சந்தையில் நேற்றுக்காலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் ஒன்பது பேர் உயிரிழந்தனர்; 21 பேர் காயமடைந்தனர்.

திருகோணமலையில் சில தினங்களுக்கு முன்னர் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற கடைக்கு அருகில் உள்ள இன்னொரு தேநீர்க் கடைக்குச் சமீபமாக நேற்று குண்டு ஒன்று வெடித்தது.

இதனால் கடை பலத்த சேதமடைந்தது.

இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காரணமாக உயிரிழந்தனர்.

குண்டு வெடித்தபின்னர் துப்பாக்கிச் சூடுகளும் அப்பகுதியில் கேட்டதாகச் சொல்லப்பட்டது.

### எட்டுப் பேர் ஆபத்தான நிலையில்

காயமடைந்த 21 பேரில் எட்டுப்பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இறந்தவர்களில் ஒருவர் ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய் என்று கூறப்பட்டது. உயிரிழந்தவர்களில் தமிழரும் சிங்களவரும் அடங்குவர் என்றும் பலர் சிங்களவர் என்றும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என்று நகரவாசிகளுக்குப் பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்தனர்.

இந்திய அமைதிப் படையினர், ஸ்ரீலங்கா இராணுவத்தினர், பொலீஸார் சம்பவம் பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் நடந்த குண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரூபவாஹினி சொன்னது!

கொழும்பு, ஆக 17

ஹர்த்தால் எதற்கும் தாம் அழைப்பு விடுக்கவில்லை என்று ஜே.வி.பி. யினர் அறிவித்தனர் என்று கூட்டுப்படைத் தலைமையகம் கூறியதாக ரூபவாஹினி தனது செய்தி அறிக்கையில் நேற்று இரவு தெரிவித்தது!

தமது எதிரிகளே இப்படி ஒரு பிரசாரத்தைச் செய்ததாக ஜே. வி. பி. உறுப்பினர் ஒருவர் லங்கா புவத்திடம் கூறியதாகவும் ரூபவாஹினி கூறியது! (அ)

## வவுனியாவை நோக்கி...

யாழ்ப்பாணம், ஆக 17

அமைதிப்படையினரின் சுமார் 60 வாகனங்கள் யாழ் குடாநாட்டில் இருந்து வவுனியா நோக்கிச் செல்வதாக சொல்லப்படுகிறது.

இந்த வாகனங்கள் தென்மராட்சி வழியாகச் சென்றுகொண்டிருப்பதாக நேற்று நண்பகல் கிடைத்த தகவல் ஒன்று கூறுகிறது. (ஒ-க)

# புலிகளைக் கைது செய்ததை கண்டித்து சோமு வெளிநடப்பு

## டில்லி நாடாளுமன்றத்திலிருந்து

புதுடில்லி, ஆக 17

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளைக் கைது செய்ததற்கு கண்டனம் தெரிவித்து திரு. என். வி. என். சோமு (தி. மு. க.) நாடாளுமன்றத்தில் வெளிநடப்புச் செய்தார்.

இந்தப் பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் தி. மு. கழக உறுப்பினர் என். வி. என். சோமு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

நாடாளுமன்றத்தில் கேள்வி நேரம் முடிந்ததும், தாம் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளும்படி சபாநாயகர் பலராம் ஜாக்கருக்குக் கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய ராணுவம் தாக்குதலைத் தீவிரப்படுத்தி இருப்பது குறித்தும் கண்டனம் தெரிவித்து, பிரச்சினையை அவர் எழுப்பினார்.

### வெளிநடப்பு

ஆனால் சபாநாயகர் பலராம் ஜாக்கர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர அனுமதி மறுத்தார்.

இதை ஆட்சேபித்து என். வி. என். சோமு வெளிநடப்புச் செய்தார்.

அ. தி. மு. க (ஜா) அணியைச் சேர்ந்த ஜெகத்ரட்சகனும் இதே பிரச்சினையை எழுப்பினார் அவருக்கும் சபாநாயகர் அனுமதி மறுத்தார் அவரும் வெளிநடப்புச் செய்தார்.

### ராஜ்யசபாவில் கோபால்சாமி

இதேவேளை — ராஜ்ய சபாவில் திரு. வை. கோபால்சாமி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாய்ச் சந்தியில் திங்களிரவு பதற்றம்

கடந்த திங்களிரவு 10. 30 மணியளவில் கோப்பாய்ச் சந்தியில் கிரனேட் வெடித்த சத்தத்தை தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன.

அதைத் தொடர்ந்து பரா வெளிச்சக் குண்டுகளும் ஏவி விடப்பட்டன. அதனால் மக்கள் பெரும்பதற்றம் அடைந்தனர்.

முகாமை அண்டிய வீடுகள் சுற்றி வளைக்கப்பட்டு ஆண், பெண் வித்தியாசமின்றி அனைவரும் அருகாமையிலுள்ள சனசமூக நிலையக் கட்டடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்றுக் காலையில் விடுவிக்கப்பட்ட அனைவரும் விசாரணைக்காக ஒன்பது மணிக்கு முகாமுக்கு வருமாறு பணிக்கப்பட்டனர். (ஒ-72)

## நல்லூர்க் கந்தன் திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 17

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இதற்கான கொடிச்சீலை நேற்று பிற்பகல் சட்டநாதர் வீதியில் உள்ள முருகன் கோவிலில் இருந்து எடுத்து வரப்பட்டது.

இன்றைய மாலைத்திருவிழா 5மணிக்கு நடைபெறும்.

இன்று முதல் திருவிழாக்காலத்தில் ஏராளமான பக்தர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு ஏற்பாடுகள் வழமைபோலச் செய்யப்பட்டுள்ளன.

மஞ்சம் எதிர்வரும் 26ஆம் திகதியும்10ஆவது நாள் சார்த்திகைத் திருவிழா செப்டம்பர் 2ஆம் திகதியும்(17ஆவது நாள்) கைலாசவாகனம் 5 ஆம் திகதியும் (20ஆவது நாள்) இடம் பெறும். (ஒ-க)

## ஈரோஸ் அலுவலகம் சோதனை!

யாழ்ப்பாணம், ஆக 17

யாழ்ப்பாணத்தில் உள்ள ஈரோஸ் அலுவலகம் நேற்று இந்திய அமைதிப்படையினரால் சோதனை யிடப்பட்டது.

நேற்று முற்பகல் பதினொரு மணியளவில் இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சுமார் அரைமணி நேரமாக இந்தச்சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாயினும் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிய வந்தது.

இதேவேளை அருகில் உள்ள வேலைத்தலம் ஒன்றும் படையினரால் சோதனை யிடப்பட்டதாக அறியவந்தது. (ஒ-10)

# ஆசிரியர்களின் சம்பளம்: அதிபர்களே காசோலை வழங்குவர்

– மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் –

மட்டக்களப்பு, ஆக. 17

இலங்கையின் சகல பகுதிகளிலும் உள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கு இனிமேல் சம்பளம் பாடசாலை அதிபர் மூலம் காசோலையாக வழங்கப்படும்.

இதற்கான தீர்மானத்தை கல்வி அமைச்சு திறைசேரியின் அங்கீகாரத்துடன் மேற்கொண்டுள்ளது.

இத்தீர்மானம்குறித்து கல்வி அமைச்சின் செயலாளர், சகல பிராந்தியக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

புதிய நடைமுறை விவரம் வருமாறு:-

சகல பாடசாலைகளும் ''ஆசிரிய சம்பளம்'' எனத் தனியான வங்கிக் கணக்கு ஆரம்பிக்க வேண்டும்.

சம்பளத் தினமன்று இச்சம்பளக் காசோலை வங்கிக்கு கல்வித் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்படும்.

சம்பளப் பெயர்ப்பட்டியலின் பிரகாரம், அதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இங்கும் வந்தது

யாழ்ப்பாணம், ஆக. 17

ஆசிரியர்களுக்கு அதிபர்களே காசோலை மூலம் சம்பளம் வழங்கும் புதிய நடைமுறை சம்பந்தமான கல்வி அமைச்சின் சுற்றறிக்கை நேற்று யாழ்ப்பாணக் கல்வி அலுவலகத்துக்கும் வந்து சேர்ந்தது.

அடுத்த மாதத்திலிருந்து புதிய சுற்றறிக்கைப் பிரகாரம் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-க)

### சுபநேரம்

17 – 08 – 88
ஆவணி—01
புதன்கிழமை
சுபநேரம்:
04 35முதல் 06.05வரை
ராகுகாலம்:
12.05முதல் 01.35வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இன்று
மங்களகரமான ஆரம்பம்
"அரவிந்தன்"
சொப்பிங் கொம்பிளக்ஸ்

சின்னக்கடை காமதேனு நிறுவனத்தினர் இன்று முதல் " அரவிந்தன் " சொப்பிங் கொம்பிளக்ஸ் என்னும் புதிய பெயரில் உங்களை வரவேற்கின்றார்கள். உங்கள் நேரம் பொன்னானது. எனவே தான் சகல விதமான மளிகைப் பொருட்களையும் சுணக்கம் இன்றி எடுத்துச் செல்ல பாதுகாப்பான பொலித்தீன் பைக்கற்றுக்களில் போட்டு விற்பனை செய்கின்றார்கள்.

அரவிந்தன்
சொப்பிங் கொம்பிளக்ஸ்
51, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
நியூ கிறீன் பீக்கிங் பலெஸ்
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
(வேறு கிளைகள் இல்லை)
( 5794 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

மீ கொண்டிஷன் கொண்டா C 90 விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய இடம்: No. 11, யாழ் ரேட் சென்ரர், புதிய சந்தை, யாழ்ப்பாணம். (5802)

நல்ல நிலையிலுள்ள EN தொடர் இலக்கமுடைய மொறிஸ் மைனர் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 164, துர்க்கா ரெக்ஸ், நவீன சந்தை, யாழ்ப்பாணம். (5748)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும், (விஷேட சழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

### அரிசி ஆலை விற்பனை

தண்ணீரூற்றில் 26 H. P. என்ஜின் No. 1 அல்லர் பான் பெட்டி பெல்ற் என்பவையுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; செ. சிவானந்தராசா, தண்ணீரூற்று, முள்ளியவளை. (5693)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு நாள் செற்ன (Shetna B 380) சேவல், பேடு புரொய்லர் குஞ்சுகள் 19/8 லும் Hyline சுறுப்பு வெள்ளை பேட்டு குஞ்சுகளும் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும். A. J. S Farm (சந்தான மாதா கோவிலுக்கு அருகாமை)45, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (5801)

Prima Lohmann வெள்ளை சிவப்புப்பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், HY-Line கறுப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (சி/6066)

ஒரு நாள் செற்ன (B 380 Bab - Cock) சேவல் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், புரொய்லர் குஞ்சுகள் 12/8; 19/8 லும், கோல்டன் கொமட் பிறவுண் சேவல் பேட்டுக்குஞ்சுகள் 17/8; 19/8; 23/8; 27/8ம் திகதியிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும். 1. R. S. K. Farm, முருகப்பிட்டி உடுவில்; 2. குபேரன் ஸ்ரோர்ஸ் கொக்குவில் சந்தி, கொக்குவில். (5668)

### இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- Nallur Farm Centre, C/o, நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C/6063]

### Dolly Tea டொலி தேயிலை

அதிக சுவை, கூடிய சாயம், நறுமணம்; இலவச ஸ்ரிக்கர் இத்தனைக்கும் உடனே நாடுங்கள்: டொலி தேயிலை. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விலாசம்:- டொலி, கல்வயல் வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (5660)

### தேவை

பழைய தொழிற்படாத நிலையில் உள்ள அமோனியா, மண்ணெண்ணையில் வேலை செய்யும் குளிர்சாதனப் பெட்டிகள் 'Glacio' 'Usha' நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு கொள்க: கிழமை நாட்களில் மு.ப. 9—5 பி.ப Uni Services Engineers, No. 19, ஆசிர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (5808)

### மணமகன் தேவை

யாழ்/இந்து வேளாள 32 வயது நிரம்பிய, கனடா பிரஜா உரிமையுள்ள தற்சமயம் லீவில் நிற்கும் மணமகளுக்கு கனடா செல்லவிருப்பமுள்ள, பட்டதாரி, தொழிற்பயிற்சி பெற்ற மணமகன் தேவை. மாற்றுத் திருமணம் செய்து கொள்ள 35 வயதுடைய கனடா பிரஜா உரிமையுள்ள மணமகனும் உண்டு. தொடர்பு:- 'ABCDE' 328 நாவலர் ரோட், ஆனைப்பந்தி. [5691]

### மணமகள் தேவை

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 30 வயதுடைய லண்டன் பிரஜாவுரிமை உடைய பொறியலாளருக்கு நற்குணமும் அழகும் உள்ள பெண் தேவை. சாதகத்துடன் முழு விபரத்துடன் எழுதுக. விளம்பர இல:- 180 மே/பா உதயன், யாழ்ப்பாணம். [5749]

### ஆள் தேவை

அலுமினியம், பித்தளை பொருட்களை உருக்கி கிடாரம், குடம், கேற்றில், அரிக்கன் சட்டி, சிலைகள், வாட்டர்பம் போன்றவற்றை செய்வதில் அனுபவமுள்ளவர்கள் தேவை. 20 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். எஸ். எஸ். சந்திரகுமார் மொடேர்ண் மோல்டிங் வேக்ஸ் சொப், முருகமூர்த்தி கோவில் வீதி, நெல்லியடி அல்லது டிஸ்கோ கூல்பார், பஸ் நிலையம், நெல்லியடி. [5811]

### தவறிவிட்டது

கே. தயா என்பவருடைய அடையாள அட்டை இல 696350507 யாழ்ப்பாணத்திற்கும் நல்லூருக்குமிடையில் மினி பஸ்ஸிலோ அல்லது செருக்கன் மினி பஸ்ஸிலோ தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது வேலணை மத்திய மகாவித்தியாலய அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன். (5809)

அடையாள அட்டை இலக்கம் 270471749V பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் பிரயாணம் செய்யும்பொழுது காணமற் போய்விட்டது. உரிமையாளர் பெயர் சுப்பிரமணியம் ஏரம்பமூர்த்தி. பிறந்த தேதி 16-2-1927. பிறப்பிடம்: பருத்தித்துறை. வதிவிடம்: சின்ன உப்போடை, மட்டக்களப்பு. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5695)

### புத்தகம்

A/L 89,90 ''காவியும் அதன் பிரயோகங்களும்'' பிரயோக கணிதம் - படிமுறைப் பயிற்சிநூல் ஆசிரியர்:- சி. துரையப்பா. பல புதிய வினாக்களுட்பட 125 வினாக்களைக் கொண்ட பூரண பயிற்சி நூல். யாழ். கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு நகர புத்தக விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம். (5687)

### டிப்ளோமா பயிற்சி

6 மாதகால டிப்ளோமா மனைப்பொருளியல் பயிற்சிகள் கேக் ஐசிங், தையல், சமையற் கலை, கூந்தல் அலங்காரம், பூவேலை, கைவேலை, கோலம், ஆரம்பம் 19- 08- 88 சுவாலயா விக்டோறியா வீதி, (சுபாஸ் ரூரிஸ்ட் ஹோட்டல் அருகில்) யாழ்ப்பாணம். (C6225)

### Spoken English with Grammar

Spoken English with Grammar வார இறுதி வகுப்பு ஆரம்பம் 20-8-88 சனி / ஞாயிறு நாட்களில். பிற்பகல் 3 மணி-5 மணி. Advanced English புதிய பிரிவு ஆரம்பம் 20-8-88 காலை 8 மணி — 10 மணி சனி/ ஞாயிறு நாட்களில். S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (5736)


## M 3 Travels

பெருமையுடன் வழங்கும்

**உடனடிப் பிரயாண ஒழுங்குகள்**

✶ சவூதி அரேபியா:

அல் ஜசிமா கம்பனி

(1) Cleaners (கிளீனேர்ஸ்)

(2) Heavy Duty Drivers (கனரக வாகன சாரதிகள்)

● புது பாஸ்போட் செய்து Visa அடித்துக் கொடுக்கப்படும்.

✶ உங்கள் தேவை எங்கள் சேவை.

✶ நம்பிக்கை, நாணயம் என்பவற்றுக்கு நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம் இதுவே.

**M 3 TRAVELS**

T. இந்திரநாதன்

சற்குணவாசா, காங்கேசன்துறை. (C 6253)


# பண்பாட்டு வரலாற்று தன்மை நீறு பூத்துக் கிடக்கின்றது

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஆக 17

டானியலின் நாவல்களில் பண்பாட்டு வரலாற்றுத்தன்மை நீறு பூத்துக் கிடப்பதைக் காண முடிகிறது. இவரின் பலமும் பலவீனமும் அரசியல் நிலைப்பாட்டில் இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிட்டார்.

அமரர் கே. டானியலின் 'தண்ணீர்' நாவல் வெளியீட்டுவிழா ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் கலந்து கொண்டு பேராசிரியர் சிவத்தம்பி வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

அவர் மேலும் பேசுகையில்; பண்டிதமணியினால் ஜனரஞ்சகப்படுத்தப்பட்டது கந்தபுராணக் கலாசாரம்.

கந்தபுராணக் கலாசாரத்தின் மறுபக்கத்தைத் தனது நாவல்கள் மூலம் படம்பிடித்துக் காட்டியவர் கே. டானியல்.

மற்றவர்களுக்கு சமயங்கள் கொடுத்த உறுதியை இவருக்கு கம்யூனிஸ்ட் கட்சி கொடுத்தது. இந்நிலையில் விசுவாசக் கட்டாயமாக மாக்சிசம் மதமாகியது. இப்படி அவர் கூறினார்

திரு சி. வன்னியகுலசிங்கம் ஆய்வுரை நிகழ்த்துகையில்; 'டானியலை விமர்சிக்க முயல்பவர்கள் முதலில் யாழ்ப்பாணத்து சமூகவியலைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இவர் சமூக ரீதியாகப் படுகுழியில் தள்ளப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கை மேன்மையடைய இலக்கியம் படைத்தவர்' என்றார்.

திரு. தெணியான் தனதுரையில் 'மரணத்தறுவாயிலும் தனது கடமையை மறந்துவிடாமல் டானியல் படைப்பாளியாகவே வாழ்ந்தவர். தமிழ் மக்களின் இருண்ட பகுதியை நேர்த்தியாகச் சித்தரித்த டானியலின் இடத்தை எவராலும் பிரதியிட முடியாது' என்றார்.

முதல் பிரதியைஎழுத்தாளர் வரதர் பெற்றுக் கொண்டார்.

வரவேற்புரையை செல்வி தாரா டானியல் நிகழ்த்தினர்.

திரு. சின்னத்தம்பி, திரு. சிவலிங்கராஜா ஆகியோரும் ஆய்வுரை நிகழ்த்தினர்.

பேராசிரியர் சண்முகதாஸ் நன்றியுரை நிகழ்த்தினர். (இ-5)

# 'கிளினிக்கல்' பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஆக.17

யாழ். பல்கலைக்கழச் மருத்துவ பீடத்தின் 1983 - 84 ஆம் கல்வி ஆண்டு மாணவர்களுக்கான ''கிளினிக்கல்'' பயிற்சி ஆரம்பமாகியுள்ளது.

கடந்த 10 மாதங்களாக பிரஸ்தாப மாணவர்களுக்கான விரிவுரைகள், பயிற்சிகள் என்பன நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

# சிறப்பாக நடந்து முடிந்த மடு மாதா உற்சவம்

யாழ்ப்பாணம், ஆக. 17

மருதமடு மாதா உற்சவம் 15ஆம் திகதி காலை 7.30மணியளவில் பாடல் பூசையுடனும் மருதமடு மாதாவின் அலங்காரச் சுற்றுப் பிரகாரத்துடனும் இனிதாக முடிவுற்றது.

மன்னார் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார், முன்னாள் கண்டி ஆயர் போல் பெரேரா அடிகளார் ஆகிய இருவரின் கூட்டுத் தலைமையில் திருநாட் பலிப்பூசை நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 18 பங்குகளின் பிரதிநிதிகளும் பாடல் பூசையில் காணிக்கைகளை ஒப்புக் கொடுத்தனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் இத் திருவிழாவில் பங்குபற்றினர்கள். குறிப்பாக நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த தமிழ்பேசும் சிங்கள மக்களும் வருகை தந்து இருந்தார்கள்.

கண்டி முன்னள் ஆயர் போல் பெரேரா அடிகளார் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் பிரசங்கங்களை நிகழ்த்தினர்.

மன்னார் அரசாங்க அதிபர் திரு. தர்மபாலனும் இந்த விழாவில் பங்கு பற்றினர்.

இந்திய அமைதிப் படையினரின் முகாம் மருதமடு திருப்பதியில் அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ)

### தேவதாயின் திரு உருவப் பிரதிஷ்டை

குருநகர், ஆக 17

புனித மரியன்னையின் இரண்டாயிரம் ஆண்டு நிறைவை முன்னிட்டு குருநகர் பங்கு மக்களால் தேவதாயின் திரு உருவம் யாழ்- பாங்ஷால் வீதி. 6 ஆம் குறுக்கு வீதி சந்தியில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு மேற்படி சொரூப் பீடத்தை பங்குத் தந்தை அருட் திரு பி. எம். இம்மானுவேல் அடிகளார் சம்பிரதாய முறைப்படி பிரதிஷ்டை செய்து வைத்தார். (இ-51)

### தேவை

**பயிற்சி மேற்பார்வையாளர்கள்**

கடல் உணவு பதனிடும் தொழிற்சாலைக்கு பயிற்சி மேற்பார்வையாளர்கள் (Trainee Supervisors) தேவை. க. பொ. த உயர் தர பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கொழும்பில் தங்குமிட வசதியுடன் 3 மாத காலம் பயிற்சி அளிக்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். முகவரி.

**Box No 326,**

C/o உதயன், யாழ்ப்பாணம். (5851)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் விபவ வருடம் ஆவணி மாதம் 3 ஆம் நாள் (19- 8- 88) வெள்ளிக்கிழமை காலை 8. 00 மணிக்கும் 9. 00 மணிக்கும் இடையில் கன்னி இலக்கினத்தில் வரும் சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| திரு. திருமதி க. ஏரம்பு அவர்களின் புதல்வன் செல்வன் **செல்வரத்தினம்** (இத்தால்) அவர்கட்கும் | திரு. திருமதி சி. சுப்பிரமணியம் அவர்களின் புத்திரி செல்வி **சிவவாசமலர்** அவர்கட்கும் |

இறைவன் திருவருளால் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள், யாவரும் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு. திருமதி க. ஏரம்பு ''அன்னை இல்லம்'' கைதடி தெற்கு, கைதடி. | திரு. திருமதி சி. சுப்பிரமணியம் (கைதடி அரசினர் முதியோர் இல்லம்) ''வாச இல்லம்'' கைதடி தெற்கு, கைதடி. |

(5853)

## அந்தியேட்டி - வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



தோற்றம்: 17 - 1 - 1928 மறைவு: 19 - 7 - 1988

அன்புடையீர்!

கடந்த 19-07-1988 இறைபதம் நோக்கிய எங்கள் குடும்பத் தலைவரும் அன்புத் தந்தையாருமான பிரபல வர்த்தகர்

**திரு. V. P. சிவராசா**

அவர்களின்

**அந்தியேட்டி**

காலம்: 17-08-1988 புதன்கிழமை காலை 8.00 மணி

இடம்: கீரிமலை தீர்த்தக்கரை

காலம்: 18-08-1988 வியாழக்கிழமை காலை 9.00 மணி

அவரது திருநெல்வேலி இல்லத்தில் அன்னாரின் திருவுருவச் சிலை திரைநீக்கம் செய்யப்படும்.

**வீட்டுக்கிரியை**

காலம்: 18-08-1988 வியாழக்கிழமை காலை 10.00 மணி

இடம்: திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

காலம்: 18-08-1988 வியாழக்கிழமை மாலை 5 00 மணி

ஐயனார் கோவிலில் மோட்ச தீப பூசை நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள், யாபேரையும் மேற்படி நான்கு கிரியை நிகழ்ச்சிகளிலும் குடும்ப சமேதராக வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

மனைவி, மக்கள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

''ராஜேஸ்வரி வாசம்''
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (C6255)


## Zellers chocolates

அதி சுவையூட்டும் மிகச் சிறந்த சொக்லேட்

★ ஸெல்லர்ஸ் ★

யாழ் குடாநாட்டின் ஸெல்லர்ஸ் சொக்லேட்டின் எமது ஏக விநியோகஸ்தர்கள்:

**சரன்கா ஏஜென்சி**

281- A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22896

ZELLERS CONFECTIONERIES LTD.
4, Jeyasingha Road,
COLOMBO - 6.
Tel: 552488

(C 6247)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தப்படாத பிரசவ விடுதி

அச்சுவேலி, ஆக 17

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகிச் சேதம் அடைந்த அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் பிரசவ விடுதி இதுவரை திருத்தி அமைக்கப்படவில்லை.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையின் பிரசவவிடுதி கடந்தவருடம் மே மாதம் ஷெல் தாக்குதலுக்குஉள்ளாகி பலத்த சேதமடைந்தது.

பிரசவ விடுதியின் கூரை 150 சதுர அடிக்கு மேல் முற்றாக இல்லாமல் வானம் பார்த்த பூமியாகக் காட்சி அளிக்கிறது.

கண்ணாடிகள் சிதறுண்டுசுவர்கள்உடைந்த நிலையில் உள்ளன

ஒருவருடத்திற்கு மேல் ஆகியும் பிரசவ விடுதி திருத்தி அமைக்கப்படவில்லை எனப் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (இ-11)

J. M. J

S. P. ANTON

வழங்கும்

வெளிநாட்டுப்

பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ ஜெர்மனி
★ பிரான்ஸ்
★ சுவிஸ்
★ அமெரிக்கா

மேற்படி நாடுகளுக்குப் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம்.

ஒவ்வொரு வாரமும் எமது சிறு குழுக்கள் இறைவன் நல்லருளுடன் மேற்படி நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. நீங்கள் விரும்பும் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு

உடனே தொடர்பு கொள்ளுங்கள்

உங்கள் பயண அமைப்பாளர்:

எஸ். பி. அன்ரன்

வேல் ட்றேட் சென்ரர்

இல 114, ஸ்ரான்லி வீதி,

(மக்கள் வங்கி முன்பாக)

யாழ்ப்பாணம்.

J. M. J

இறைவன் கருணையினால் நாம்பெறும் வெற்றிகளை நாங்கள் பறைதட்ட விரும்புவதில்லை. ஆனால்

எமது சேவையினால் வளமான வாழ்வு பெற்றவர்களின் வாழ்த்துக் கடிதங்களைக் காணும் போது பரீட்சையில் சித்தி பெற்ற தன் மகனைக் காணும்போது ஒரு தாய் அனுபவிக்கும் அதேயளவு மகிழ்ச்சியை நாமும் அடைகின்றோம்.

அந்த மகிழ்ச்சியை எமது உதயன் வாசக நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வதில் தவறேதும் இல்லையல்லவா?......

மற்றும் சகல விவரங்களுக்கும்;

உங்கள் பயண அமைப்பாளர்:

எஸ். பி. அன்ரன்

(C/6221)

# மோசமான நிலையில் இயங்கி வரும் முல்லைத்தீவு பஸ் டிப்போ

### 6 பழைய பஸ்கள் மட்டும் சேவையில்

மாங்குளம், ஆக 17

இ. போ. ச. சபையின் முல்லைத்தீவுச் சாலை [டிப்போ] மூடப்படும் அபாயம் இருந்து வருகிறது.

இருபது பஸ்கள் இச்சாலைக்கு பாவனைக்குத் தேவையாக இருந்த போதிலும் பழைய நிலையிலுள்ள ஆறு பஸ்கள் மட்டுமே தற்போது சேவையில் ஈடுபடுகின்றன

இச்சாலைக்கு சில புதிய பஸ்கள் வழங்கப்படாவிடில் இச்சாலை விரைவில் மூடப்படும் நிலையை எதிர்நோக்கி வருகிறது.

இச்சாலையால் கொக்கிளாய், மாங்குளம் துணுக்காய் ஊடாக யாழ்ப்பாணம், புதுக்குடியிருப்பு ஊடாக யாழ்ப்பாணம், மாத்தளை, வவுனியா, முத்தையன் கட்டு, நெடுங்கேணி போன்ற இடங்களுக்கு பஸ் சேவையை நடத்த போதிய பஸ்கள் இல்லாததினால் சில இடங்களுக்கு மட்டும் ஒருசில மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவை நடைபெறுகிறது.

இதனால் போதிய வருமானம் இச் சாலைக்கு கிடைப்பதில்லை.

இவ்வருமானத்தை யிட்டு சாரதிகள், நடத்துனர்கள், மற்றும் உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்க முடியாமலும், எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியாமலும் உத்தியோகத்தர்கள் அவதியுறுகின்றனர்.

உதிரிப் பாகங்கள் பொருத்தவேண்டிய நிலையில் ஏழு பஸ்கள் பல மாதங்களாக கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

அத்தோடு சாலைப் பொறியியலாளர் பிரிவும் சாலை முகாமையாளர் பிரிவும் முன்னர் ஒன்றாக இருந்தபோதிலும் தற்போது இரு பிரிவுகளாக இயங்குகின்றன.

இரு பிரிவுகளும் ஒன்றாக இணைக்கப்படுவதோடு இச்சாலைக்கு புதிய சில பஸ்கள் வழங்கப்படாவிடில் இச்சாலை விரைவில் மூடப்படலாமென தெரியவருகிறது (இ-94)

## சைவாகம முறைகளை கடைப்பிடிக்க வேண்டும்

காங்கேசன்துறை, ஆக. 17

சைவாகம முறைகளுக்கு விரோதமாக பெண்கள் தலைவிரிகோலத்துடனும், ஆண்கள் மேல் அங்கி அணிந்தும் ஆலயத்துக்கு வருவது தவிர்க்கப்பட வேண்டும்.

மாவை கந்தன் ஆலய ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ. சு. து. ஷண்முகநாதக் குருக்கள் இவ்வாறு கூறினார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் இறுதி வைபவத்தில் அவர் மேலும் பேசியதாவது:-

சைவ நெறிப்படி மாவை ஆலயத்தில் கிரியைகள் பலகாலமாக நடைபெற்று வருகின்றன. அந்நெறிப்படி பக்தர்களும் ஆலயத்துக்கு வந்து வழிபாடு செய்ய வேண்டியது அவசியமாகும்.

இம்முறை உற்சவம் சிறப்பாகவும், அமைதியாகவும் நடைபெற உதவிய சகலருக்கும் முருகன் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்படி அவர் கூறினார்.

ஆலய உற்சவ காலங்களில் சிறப்புறப் பணியாற்றிய திரு. நா. போஜன் தலைமையிலான சாரணர் குழுக்களுக்கும், திரு. த. அருந்தவராசா தலைமையில் இயங்கிய சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவுக்கும். திரு. எஸ். சிவபாதசுந்தரம் தலைமையில் இயங்கிய தெல்லிப்பளை பாதுகாப்புச் சேவையினருக்கும், ஆலயத்தில் சிரமதானம் மூலம் பணிகளை நிறைவேற்றிய வீமன்காமம் மகாவித்தியாலய மாணவர்களுக்கும் அவர் நன்றி கூறினார். (இ-68)

## "எல்லோரும் ஒரு குலம் என்ற பரந்த நோக்குடன் செயற்படுவதே லயன்ஸ் கழகம்"

மானிப்பாய், ஆக. 17

'தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று எண்ணாது எல்லோரும் ஒருகுலம், ஒருகுடும்பம் என்ற பரந்த மனிதாபிமான மனப்பாங்குடன் செயல்படுவதே லயன்ஸ் கழகம்.'

மானிப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் நா. நகுலேஸ்வரன் நவாலி மகேஸ்வர இல்லத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினர் தமது இவ்வாண்டு நடவடிக்கையாக நவாலியிலுள்ள மகேஸ்வர இல்ல அநாதைப் பிள்ளைகள் விடுதியில் அநாதைப் பிள்ளைகளுடன் சேர்ந்து மதிய போசனம் அருந்தினர்.

வைபவத்துக்கு லயன் நா. நகுலேஸ்வரன் தலைமை வகித்தார்.

திரு. நகுலேஸ்வரன் மேலும் பேசுகையில், ஏழைகளின் முன்னேற்றத்துக்காக உழைத்து வரும் லயன்ஸ் கழகம் தனது அடுத்த நடவடிக்கையாக மானிப்பாய்ப் பகுதியில் நீரிழிவு நோய் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தார். (இ- 90)

## வந்து சேரவேண்டிய பல லட்சம் ரூபா பணம் முடங்கிக் கிடக்கிறது

மானிப்பாய், ஆக.17

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குக் கிடைக்கவேண்டிய பலலட்சம் ரூபா இன்னும் வந்துசேராததால் பொதுமக்களுக்கான பல சேவைகளைச் செய்யமுடியாமல் இருப்பதாகத் தெரியவருகின்றது.

கடந்தகால அசம்பாவிதங்களின் போது யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் பணிப்பின் பேரில் இக்கூட்டுறவு மொத்த விற்பனவுச் சங்கத்தால் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ஐந்து கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டது.

இதன்மூலம் சுமார் இரண்டுலட்சம் ரூபா சங்கத்துக்குச்செலவாகியது.

இதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட இலவச உணவு நிவாரணம், மற்றும் இலவச உணவு முத்திரைகள் போன்றவற்றுக்காக சுமார் ஐம்பது லட்சம் ரூபாவரை செலவாகியது.

இப்பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்படி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் பணம் மீளளிக்கப்படுவதற்கான சூழ்நிலை இதுவரை ஏற்படாதிருக்கின்றது.

சங்கத்துக்கு வருமதியான பணம் நேரகாலத்துடன் கிடைத்தால் பொதுமக்களுக்காக சங்கம் செய்துவரும் பல சேவைகளை மேலும் விஸ்தரிக்க முடியும் என சங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-90)

### 6 பேருக்குக் கௌரவம்

கொடிகாமம், ஆக 17

மீசாலை வடக்கு இராமாவில் முருகன் கோவிலில் புதிதாக அமைக்கப்பட்ட விநாயகப் பெருமானுக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் மகாகும்பாபிஷேகத்தின் போது ஆறுபேர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

''ஆத்ம ஜோதி'' ஆசிரியர் திரு. நா. முத்தையா, இசைப்புலவர் பண்ணிசை வேந்தன், திரு. சி. செல்லத்துரை, கட்டடக் கலைஞர்கள் திரு. சி. பாலசுப்பிரமணியம், திரு. நா. சின்னச்சாமி, பொ. கனகரத்தினம், பொ. தேவர் ஆகியோரே இந்த அறுவரும் ஆவர். (இ 75)

## 'ஞானப்பிரகாசர் போல கிளிநொச்சிக்கு ஒரு சூசைநாதர் அடிகள்'

கிளிநொச்சி ஆக 17

யாழ்ப்பாணத்திற்கு ஞானப்பிரகாச அடிகளார் போன்று கிளிநொச்சிக்கு சூசைநாதர் அடிகளார் திகழ்ந்தார் என்பது ஒருகலை. நுளம்புக்கடி, யானைகள் அட்டகாசம், கொடிய விலங்குகளின் தாக்கம் இவற்றுக்கெல்லாம்ஈடுகொடுத்து மனம் சளைக்காது சேவை புரிந்தவர் சூசைநாதர் அடிகளார்

கிளிநொச்சி புனித சென் திரேசா ஆலய குருவானவராக இருந்து மறைந்த அமரர் எஸ். எஸ். சூசைநாதர் அடிகளார் மறைந்து 25 ஆம் ஆண்டு நினைவு தின வைபவத்தில் லோங்ஸ் இன்ரிஸ்ரியூட் அதிபர் வணபிதா மதுரநாயகம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;

அன்பு உள்ளம்கொண்ட சூசைநாதர் அடிகளார் கிளிநொச்சி சென் திரேசா பாடசாலையின் ஆரம்ப கர்த்தாவாக இருந்தவர்.

யாழ்ப்பாணத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி எவ்வாறு அமைந்துள்ளதோ அதே நிலையில் கிளிநொச்சிசென் திரேசா பாடசாலையின் தரத்தை கொண்டுவர அரும்பாடுபட்டு வந்தவர்.

அப்போது பாடசாலைகளை அரசு தேசியமயமாக்கியது. சென் திரேசா பாடசாலையையும் அரசு சுவீகரித்தது.

இதனால்மனமுடைந்த நிலையில் சுகவீனமுற்றார். ஈற்றில் சேந்தான் குளத்தில் 1963 ஜூலை 17ஆம் திகதி இறைவனடி எய்தினார்.

இவ்வாறு அவர் கூறினார்.

(இ-76)

### கிளிநொச்சியில் நடந்த போராட்டம்

கிளிநொச்சி ஆக 17

அகதிகள் நிவாரணம் வழங்குவதில்பாரபட்சம் காட்டுவதாகக் கூறி கிளிநொச்சி கச்சேரி முன் விவேகானந்த நகர் மக்கள் நடத்திய மறியல் போராட்டம் கிளிநொச்சி அரசாங்க அதிபரின் முயற்சியால் நிறுத்தப்பட்டது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. தேவசிகாமணி, மறியல் போராட்டம் நடத்தியவர்கள் முன் உரையாற்றி அவர்களைச் சமாதானப்படுத்தினார்.

இதனை அடுத்து மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

(இ-76)

ஹரன் வெண்திரையில்

2ஆவது ஜனத்திரள் வாரம்

விழாவெடுத்த வெற்றிச் சித்திரம்

தினசரி காலை 10-30, மாலை 2-30

மோகன், சுஹாசினி

செந்தில், ஸ்ரீவித்யா

நடித்த

ஆனந்த ஆராதனை

முழுக் குடும்பத்திற்கும் உகந்த படம்

[5788]

## இலக்கியத்தின் முக்கிய பயன்பாடு மனித நிலைப்படுத்தலே ஆகும்

### பேராசிரியர் சிவத்தம்பி உரை

பருத்தித்துறை, ஆக 17

'இலக்கியத்தினுடைய முக்கிய பயன்பாடு மனித நிலைப்படுத்தல். இம் மனித நிலைப்படுத்தல் தான் இலக்கியத்தின் தொடர்புத் தன்மை. தொடர்புறுத்துவதற்கு அதனைப் பெறுபவரிடம் இலக்கியத்திறனை பெறும் தன்மை இருக்க வேண்டும். இத் தன்மையே உணர்திறன் ஆகும்.

யாழ். பல்கலைக் கழக நுண்கலைபீடத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி இப்படிக் கூறினார்.

வட இந்து மகளிர் கல்லூரியில் செல்வி சந்திரா தியாகராசாவின் ''நிழல்கள்'' நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

யதார்த்தா கலை இலக்கிய வட்டத் தலைவர் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

விழாவில் பேராசிரியர் சிவத்தம்பி தொடர்ந்து கூறியதாவது:-

எழுத்தாளனுடைய அனுபவம், எழுத்தாளனுடைய அனுபவ நேர்மைஇவையே உணர்திறனுக்கு காலாக அமைகின்ற விடயமாகும்.

இன்று வாசகர்களுக்குத் தீனி போடும் நூல்கள் குறைவாகவே உள்ளன. குறிப்பாக இன்று வாசகர்களில் பெரும்பான்மையோர் பெண்கள். குறிப்பாக உயர் குடும்பப் பெண்கள் பொழுது போக்குக்காக வாசிக்கிறார்கள். நல்ல இலக்கியங்கள் தோன்ற வேண்டும். அதனை அனைவரும் படிக்கும் போது சமுதாயத்தில் நல்லமாற்றங்கள் தோன்றும்.

இப்படி அவர் கூறினார்.

அடுத்து எழுத்தாளர் தெணியான் ஆசியுரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து வைத்திய கலாநிதி திருமதி புனிதவதி தங்கராசா நிழல்கள் என்னும் சிறுகதை,குறுநாவல் தொகுப்பு நூலை வெளியிட்டு வைத்தார்.

நிழல்கள் முதற் பிரதியைபருத்தித்துறை வர்த்தகரும்குசன்ஸ்ருடியோ உரிமையாளருமாகிய [illegible] பெற்றுக் கொண்டார். [illegible] பெண் எழுத்தாளரும் தெல்லிப்பழைமகாஜனக் கல்லூரி ஆசிரியையுமான திருமதி கோகிலா மகேந்திரன் ஆய்வுரை நிகழ்த்துகையில் ''இளம் பெண் எழுத்தாளர் செல்வி சந்திரா தியாகராசா இன்றைய இலக்கியத்துறையில் சுமார் ஏழாண்டு காலமாக ஈடுபாடுள்ளவர். அவர் குறுகிய காலத்தில் இவ்வாறான சிறுகதை, குறுநாவல் தொகுதியான ''நிழல்கள்'' எனும் நூலை அணிந்துரை இன்றி வெளியிட்டுள்ளார் என்றார்.

'அலை' ஆசிரியர் திரு. அ. ஜேசுராசா தமது ஆய்வுரையில்; 'வெறுமனே கருத்துக்களைச் சொல்வது அல்லதுயோசித்துஎழுதும் படைப்புக்கள்சுத்தமான இலக்கியமாகஅமைய மாட்டாது என்றார்.

குப்பிளான் ஐ. சண்முகம், இளம் எழுத்தாளர் திரு. எஸ். கருணையோகன், எழுத்தாளர் திரு. ரஞ்சித்குமார் ஆகியோரும் உரையாற்றினர்.

விழாவிலே சிறப்பம்சமாக அட்டைப்பட ஓவியர் திரு. எஸ். கைலாசநாதன், வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறைச் சாலை அத்தியட்சகர் திரு.எஸ். மாணிக்கவாசகத்தினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இறுதியில் புலோலி யதார்த்தா கலை இலக்கிய வட்டச் [illegible] திரு. ஏ. என். எஸ். திருச் [illegible] நன்றியுரை கூறினார்.

(இ - 118 - 70)

உ

திருமணம்

அன்புடையீர்!

நிகழும் விபவ வருஷம் ஆவணி மாதம் 4-ஆம் நாள் [19 - 8 - 88] வெள்ளிக்கிழமை மாலை 4-20 மணி முதல் 5-50 மணி வரையுள்ள சுபவேளையில்

காலஞ்சென்ற திரு. ந. மாணிக்க நடராசா, காலஞ்சென்ற திருமதி ஜெகசோதி மாணிக்க நடராசா தம்பதிகளின் புதல்வன்
செல்வன் ஜெகமோகன்
அவர்களுக்கும்

காலஞ்சென்ற திரு. ஜெயராஜசிங்கம், திருமதி சிவனேஸ்வரி ஜெயராஜசிங்கம் தம்பதிகளின் புதல்வி
செல்வி கலைவாணி
அவர்களுக்கும்

கனடா ரொறன்ரோ றிச்மன்ட் பிள்ளையார் கோவிலில் திருமண மாங்கல்ய தாரணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்

திரு. திருமதி யுகேந்திரன்
83/2, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

திருமதி சி. ஜெயராஜசிங்கம்
228/5, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

(5784)

டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

Grant BJK&E PFL 1157

தினமும் டியூரோல்® அருந்துங்கள்.
அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ.

Pfizer

சில்லறை விலை ரூ.39/90 200 மி. லீ.

®பைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொலையும் தற்கொலையும்

வவுனியா, ஆக 17

நெல்லுக்குளம் பகுதியில் கோபம் கொண்ட இளம் கணவன் ஒருவர் தனது மனைவியைக் கோடரியால் வெட்டிக் கொன்றதுடன் தானும் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட பிணக்குத் தகராறே இதற்குக் காரணம் என்று தெரியவந்துள்ளது. (இ-16ƚ)

# விழிப்புலன் வலுவிழந்தோர் தொழில் வாய்ப்பு நிலையம்

## கனேடிய உதவியுடன் கைதடியில் நிறுவப்படும்

காங்கேசன்துறை ஆக 17

பல லட்சம் ரூபா செலவில் விழிப்புலன் வலுவிழந்தோர் தொழில்வாய்ப்பு நிலையம் ஒன்று கைதடியில் அமைக்கப்படவிருக்கிறது.

இந்நிலையத்துக்கு கனேடிய அபிவிருத்தி நிதியம் உதவி வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விழிப்புலன் வலுவிழந்தவர்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கவழி செய்யும் வகையில் கைதடி நவீல்ட் பாடசாலைக்கு அருகில் தொழில் நிலையம் ஒன்று அமைக்கும் பணியில் விழிப்புலன் வலுவிழந்தோர் சங்கம் ஈடுபட்டுள்ளது.

அரசால் வழங்கப்பட்ட இக்காணியில் தொழில் நிலையம் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ் நகருக்கு வருகை தரவிருக்கும் கனேடிய அபிவிருத்தி நிதிய அதிகாரி திரு. பிறவுன்நைல் இந்நிலையத்துக்கு விஜயம் மேற்கொண்டு உதவிவழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-68)

### ஐந்தாண்டு நினைவஞ்சலி



உதயம்:
20 - 6 - 1909

அஸ்தமனம்:
17 - 8 - 1983

**திரு. நாகமணி பூலோகசுந்தரம்**

குடும்பத்தின் மூத்தவரே
குலமகனாய் ஒளிர்ந்தவரே
வேகுதையா உள்ளம்
வெந்துருகி சாகுதையா
கள்ளமில்லா மனதாலே
எம்மைக் கவர்ந்தவரே
நிலையில்லா இல்வாழ்வு பொய்யென்றும்
எல்லாம் என்றோ முடிந்த காரியமென்றும்
எண்ணி எங்களைவிட்டுப்
பிரிந்தீர்களோ அப்பா!

நீங்கள் மறைந்த ஐந்தாண்டுகளும் உங்கள் பாசமுள்ள நினைவுகள் எங்களை விட்டகலாதப்பா. உங்கள் ஆத்மசாந்திக்காக தினமும் எங்கள் பிரார்த்தனைகள்.

**அன்பு மனைவி, மகன், மகள் மருமகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.**

27/3, பசல் லேன், வெள்ளவத்தை.
"ராஜபதி" தும்பளை ரோட், பருத்தித்துறை.
[5766]

### ஈராண்டு நினைவஞ்சலி



**கனகசிங்கம் கலாரஞ்சன்**
(ஆலைப்பகுதி சீமெந்துக்கூட்டுத்தாபனம் (.. கே. எஸ்)

மலர்வு: 10-12-1966
உதிர்வு: 17-08-1986

நெஞ்சத்தின் நினைவலைகள்
அத்தனையும் பசுந்தளிர்கள்
பஞ்சையே திரித்தெடுத்து
பலநிற ஆடையாக்கி
குஞ்சையே பொரித்தெடுத்து
கூவிடும் சேவலாக்கி
வஞ்சத்தில் வீழ்த்திவிட்ட
இறைவனையே என்னவென்போம்.

உன் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தித்து உன்பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள், ஜேர்மனிகலாநாதன், அண்ணா, அத்தான், பெரியம்மா, ஐயாச்சி, சித்தப்பா, சித்தி.

இல 32, இரணைக் குடிசை,
காங்கேசன்துறை.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
(5755)

# சந்நிதி கோயில் உற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது

யாழ்ப்பாணம், ஆக 16

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில் வருடாந்த உற்சவம் வழமைபோல் சிறப்பாக நடைபெறுகின்றது.

எனினும் ஊரடங்குச் சட்டம் காரணமாக இரவில் நடைபெற வேண்டிய உற்சவங்கள் பகலிலேயே நடைபெறுகின்றன.

பக்தர்களும் தொண்டர்களும் மிகுதியாகக் காணப்படுகின்றனர்.

இதே சமயம் அமைதிப் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் செய்து வந்த சோதனை நடவடிக்கைகளை இப்போது இந்திய அமைதிப்படையினர் செய்து வருகின்றனர்.

வெளிச்சவீடு நிலையக் கட்டடத்துக்கு அண்மையிலும் தொண்டமானாறு சந்தியிலும் இந்திய அமைதிப்படையினர் சென்றியில்இருந்துசோதனைகளை மேற்கொள்கின்றனர்.

கோவில் வீதிகளிலும் அவர்களை காணக்கூடியதாக இருக்கிறது.

இது பற்றி ஒரு பக்தரிடம் உதயன் செய்தியாளர் கேட்டபோது அவர் சொன்னதாவது:

கடந்த இருவருடங்களாக உற்சவம் நடைபெறுமல் நாம் பட்ட கஷ்டங்கள் போதும். என்ன நடந்தாலும் திருவிழாவிற்குப் பிறகு நடக்கட்டும்.

இப்படி அவர் சொன்னார். [இ-126]

## குண்டு வெடிப்பை அடுத்து துப்பாக்கிச்சூடு

திருகோணமலை, ஆக 16

வடகரைவீதியிலுள்ள சைனீஸ் ஹோட்டலுக்கு அருகில் இடம்பெற்ற குண்டு வெடிச்சம்பவத்தை அடுத்து சில மணி நேரத்தின் பின்பு அதே வீதியில் குள்ள வாடியில் அமைந்துள்ள பொலீஸ் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

சில நிமிடங்கள் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் காவல் நிலையத்திற்கு முன்னுலுள்ள வீடுகளிலிருந்த இருவர் காயத்திற்குள்ளாகினர்.

இதே நேரம் அதே பகுதியில் கடலுக்குச் சென்று திரும்பிய மீனவர்கள் படகுகளுடன் மறித்து வைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் அவர்கள் திருக்கடலூரில் அமைந்துள்ள இந்தியப் படையினரின் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அன்றிரவு 9 மணியளவில் விடுவிக்கப்பட்டனர். (இ-150)

## சாவகச்சேரி வாசி இராமேஸ்வரத்தில் மரணம்!

இராமேஸ்வரம், ஆக 17

இராமேஸ்வரம் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்த இலங்கைவாசி ஒருவர் வயிற்றுப் போக்கால் மரணமானர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றிக்கூறப்படுவதாவது:

இலங்கையிலிருந்து படகுமூலம் ராமேஸ்வரம் வந்த 29 பேரைக் கடற்படையினர் கைது செய்தனர். சுங்க இலாகாச் சோதனைக்குப்பிறகு இவர்கள் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டனர். இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின்கீழ் இவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்படி காவலில் வைக்கப்பட்டனர்.

இவர்களில் சாவகச்சேரியைச் சேர்ந்த அப்துல் காதர் என்பவர் வயிற்றுப்போக்கால் அவதிப்பட்டார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர், அங்கு மரணமானர்.

பொலீஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரித்து வருகின்றனர். (ஓ-4)

# ஆடுதிருடச் சென்றவர்கள் மனிதனின் கழுத்தை வெட்டிவிட்டுத் தப்பினர்!

வட்டக்கச்சி, ஆக. 17

ஆடு திருடச் சென்றவர்கள் ஒருவரின் கழுத்தை வெட்டிவிட்டு ஓட்டம் பிடித்தனர். கழுத்து வெட்டப்பட்டவர் பின்பு மரணமானர்.

கிளிநொச்சி தருமபுரத்தைச் சேர்ந்த மு. குமாரவேலு என்பவரே இவ்வாறு இறந்தவர் ஆவர்.

சம்பவம்பற்றி இவரது மனைவி அழகாச்சி உதயனுக்குத் தெரிவித்ததாவது:—

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் மத்திய வகுப்புத் திட்டத்தில் வசிக்கும் நாம் சம்பவதினம் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தோம். இரவு நேரத்தில் ஆடு திருடவந்தவர்கள் ஆட்டை அவிழ்த்தபோது சத்தம் கேட்டது. எனது கணவர் விழித்துக்கொண்டார். சத்தமிட்டவாறு வெளியே வந்தார்.

வாசலைத் தாண்டும்பொழுது அவரின் கழுத்தில் பலத்த வெட்டு விழுந்தது.

பின்னர் நான் கூச்சல் போட்டபோது திருடர்கள் எச்சரித்துவிட்டு ஓட்டம் பிடித்தனர். காயமடைந்த கணவரைக் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்ப்பித்தேன். பின்பு யாழ். பெரியாஸ்பத்திரிக்கு அவர் மாற்றப்பட்டார்.

யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பலன் அளிக்காமல் போகவே மீண்டும் கிளிநொச்சிக்குக் கொண்டுவரப்பட்டு 12ஆம் திகதி இறந்துவிட்டார். (இ-10-ரி)

## மருதனமடம் ஆச்சிரம ஆண்டுவிழா

யாழ்ப்பாணம் ஆக 17

இணுவில் மருதனமடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் 49 ஆவது ஆண்டு விழா இம்மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை முழு நாள் நிகழ்ச்சியாக நடைபெறுகிறது.

வணக்குத்துக்குரிய சேவக்சாம் தேவரத்தினம் அல்பிரட் (சாம்அண்ணன்) இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

காலை 6. 30 மணிக்கு பரிசுத்த நற்கருணையுடன் இந்த ஆண்டு விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன திருமுழுக்கு ஆராதனை, ஸ்தோத்திர ஆராதனை, கலந்துரையாடல், பரிந்து வேண்டுதல் ஆகியவை நடைபெறும்.

பிற்பகல் 3.00 மணிக்கு பகிரங்கக் கூட்டம் நடைபெறும். (இ)

## பஸ்ஸிலிருந்து விழுந்து காயம்

காங்கேசன் துறையிலிருந்து யாழ் நோக்கி வந்த மினி பஸ்ஸிலிருந்து விழுந்ததால் ஒருவர் பலத்த காயம் அடைந்தார்.

பஸ்ஸின் நடத்துனரான காங்கேசன்துறையைச் சேர்ந்த இ. பாஸ்கரன் (22 வயது) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தெல்லிப்பளைக்கு சமீபமாக நடைபெற்றது (இ-9)

# கிராம அபிவிருத்தியே சங்கத்தின் முக்கியநோக்கம்

பச்சிலைப்பள்ளி ஆக 17

கிராமங்களில்சங்கங்கள் அமைக்கப்படுவது அங்குள்ள மக்கள் ஒற்றுமையாக ஒன்று கூடி அக்கிராமத்தின் மேம்பாடு, பொருளாதாரவளர்ச்சி, போன்றவற்றைவளர்ப்பதோடு சிறப்பாக இயங்கும் சங்கங்கள் தற்போது அரசாங்கத்திடம் மட்டுமன்றி வெளிநாடுகளின் உதவிகளைப்பெற்றுத்தம் பகுதியை அபிவிருத்தி செய்வதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

முகமாலை இந்திரபுரம் கிராம அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பணக்கூட்டத்தில் உரையாற்றிய பளைப் பிராந்திய கிராம அபிவிருத்தி அலுவலர் திரு. ம. அழகேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இந்திரபுரம் மக்கள் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றஇக் கூட்டத்தில் நிலையத்தலைவர்திரு பா.ஜோர்ஜ் ஐக்கிய நாணய சங்கத் தலைவர் கி. கனகசபை, கா. வேலாயுதம்பிள்ளை ஆசிரியர் உட்பட பலர் உரையாற்றினர்.(இ ரி)

## ஒன்றுகூடல்

காங்கேசன்துறை ஆக 17

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் கொண்ட ஒன்றுகூடல் வைபவம் ஒன்று இம்மாதம் 20 ஆம் திகதி காலை 9. 30 மணிக்கு தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற விருக்கிறது.

யாழ்- தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. சி. சிவமகாராசா இவ் வைபவத்தை ஆரம்பித்து வைப்பார். (இ-68)

### சண்டிலிப்பாய் உ. அ. அதிபர் பிரிவில்

# உணவு முத்திரைகள் மாதமுடிவுக்குள் வழங்கப்பட்டுவிடும்

மானிப்பாய், ஆக 17

வலிகாமம் மேற்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கான இலவச உணவு முத்திரைகள் இம்மாத முடிவுக்குள் வழங்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உணவு முத்திரைகளை கிராம சேவையாளர்களின் உதவியுடன் கூடிய விரைவில் பொது மக்களுக்கு வழங்கி [illegible] முத்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிய உணவு முத்திரைகள், குழந்தைகளுக்கான உணவு முத்திரைகள் போன்றன இம்மாதக் கடைசி வாரத்தில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் இயங்கும் காலத்தில் மேற்கொள்ளப்படும் என உதவி அரசாங்க அதிபர் நமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தற்போது வழங்கப்பட உள்ள உணவு முத்திரைகள் முன்னர் உணவு முத்திரைகளை [illegible] மட்டுமே வழங்கப்பட [illegible] அவர் கூறினார். [இ-90]

# முழங்காவிலில் நடந்த இல்ல விளையாட்டுப் போட்டி

கொடிகாமம் ஆக 16

பூநகரிப் பகுதியைச் சேர்ந்த முழங்காவில் அ. த. க. பாடசாலை விளையாட்டுப் போட்டி கொத்தணி அதிபர் திரு. க. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. சோ. அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அலுவலகக் கல்வி அதிகாரி ஜனாப் எஸ். ஏ. வி. எம். இனூ சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வித்தியாலய முன்னாள் அதிபரும் இந் நாள் பளை இயக்கச்சி அதக பாடசாலை அதிபருமான திரு. பொன்தில்லைநாதன் மங்கலவிளக்கு ஏற்றிகொடி ஏற்றி போட்டியை தொடக்கி வைத்தார்.

பாரதி, வள்ளுவர் நாவலர் இல்லங்கள் முறையே முதலாம் இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்றன.

விளையாட்டுச் செயலாளர் திரு. கே. முருகதாசன் நன்றி தெரிவித்தார். (இ-75)

### மக்கள் முகம்

## மானிப்பாய் வரியிறுப்பாளர் சங்கம்

மானிப்பாய் ஆக 14

மானிப்பாய் பட்டின வரியிறுப்பாளர் சங்க வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. எஸ். பத்மநாதன், உபதலைவர்கள் திரு. வி. எஸ் கணபதிப்பிள்ளை திரு. ரி. ஜெகநாதன் செயலாளர் திரு. என். விவேகானந்தராசா. துணைச்செயலாளர் திரு. வி. கே. நடராசா.

பொருளாளர் திரு. எம். அருணசலம். கணக்குப் பரிசோதகர்கள் திரு. இ. வல்லிபுரம், திரு.கே. இராசதுரை செயற்குழு உறுப்பினர்கள் திருவாளர்கள்- எஸ். சிவகுமார் கே. தம்பிராசா, என். சிதம்பரநாதன், ஏ. தியாகராசா, வீ. மகேந்திரராசா, என். பூரணலிங்கம் எஸ். சிவகலாகசுந்தரம், டபிள்யூ. ஜீ. அன்னப்பா, எஸ். பாலகிருஷ்ணன். (இ-90)

## மண்எண்ணெய் விநியோகம் இல்லை

நெடுந்தீவு, ஆக 16

கடந்த ஒருமாதத்துக்கு மேலாக நெடுந்தீவு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்எண்ணெய் விநியோகம் இடம்பெறவில்லை.

இதனுல் தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து கூடுதல் விலைகொடுத்தே பொதுமக்கள் தமக்குத் தேவையான எண்ணெயைப் பெறவேண்டியுள்ளது. (சி-111


# SKY-ROSE

**No. I, Hospital Road, JAFFNA.**

நீங்கள் விரும்பிய புதிய, பழைய பக்திப் பாடல்களை இசைத் தட்டுக்கள் மூலம் ஸ்ரீரியோ முறையில் ஒலிப்பதிவு செய்து கொள்ளவும் மற்றும் இசைத் தட்டுக்களில் இருந்து பதிவு செய்யப்பட்ட புதிய, பழைய பக்திப் பாடல்கள், நகைச்சுவைகள், கதை வசனங்கள், இந்தி ஆங்கிலப் பாடல்கள் ஆகியன பதிவு செய்த கசேட்டுக்களில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள யாழ்நகரில் ஒரே ஸ்தாபனம்.

## ஸ்கைறேஸ்

**இல. 1,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

கந்தன் புகழ்மாலை - சூலமங்கலம் சகோதரிகள்
ஆறுபடை வீடு - சூலமங்கலம் சகோதரிகள்
சக்தி வேல் - சூலமங்கலம் சகோதரிகள்
விநயகர் முருகன் - சீர்காழி சிவசிதம்பரம்
ஓம் சரவணபவ முருகன் - P சுசிலா, கிரிஜா, சங்கர்
திருமுருகன் தேனிசை - சீர்காழி
சக்தி வேலன் - சீர்காழி
தெய்வத் திருப்பாடல் - சீர்காழி
அருளும் தெய்வங்களும் - T. M. S.
வேலவன் பாடல் - T. M. S.
திருமுருகன் அருள் விருந்து - T. M. S.
ஓம் முருகா - T. M. S.
அறுபடை திருப்புகழ் - K. J. ஜெசுதாஸ்
ஸ்ரீ சண்முக கவசம் - T. M. S.
வள்ளி திருமணம் - கிருபானந்தவாரியார் [பிரசங்கம்]
ஸ்ரீமுருகாஞ்சலி - T. M. S.
முருகன் சுப்ரபாதம்

★ றேடியோ, T. V., வீடியோ, மணிக்கூடு மற்றும் எலெக்ரோனிக் பொருட்கள் திருத்திக் கொடுக்கப்படும்.

★ கலர் பிலிம் சுருள் கழுவி கொடுக்கப்படும்.

★ Maxell Odio, Video கசெற்றுகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூரை முன்னிட்டு நல்லூரில் எமது ஸ்தாபனம் திறக்கப்பட்டுள்ளது.

**ஸ்கைறேஸ் மியுசிக்**
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[C 6246]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

**பொருள்:**
மிக்க பசியும் ஓயாத நோயும் (வெளியே இருந் வந்து தாக்கி) அழிவு செய்யும் பகையும் தன்னிடம் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 32073
17-08-1988 த. பெ. இல. 23


## மாணவர் சக்திக்கு வெற்றி

இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவன் தவராசா விடுதலை செய்யப்பட்டு விட்டார். இது எல்லோருக்கும் திருப்தியும், மகிழ்ச்சியும் தரும் செய்தியாகும்.

மாணவர்களைக் கைது செய்யும் விவகாரத்தில் இந்திய அமைதிப் படையினர் மிகவும் கவனமாகவும், நிதானமாகவும், நியாயபூர்வமாகவும், ஒரு சீர்முறையாகவும் நடந்து கொள்வதன் அவசியத்தை, ஏற்கனவே பல தடவைகள் இப்பத்தியில் வலியுறுத்தி இருந்தோம்.

பல்கலைக்கழக மாணவன் தவராசா விடயத்தில் அமைதிப்படை அதிகாரிகள் நிதானமாக நடந்து கொண்டார்கள் என்பது வரவேற்கத் தக்கது.

பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய சாத்வீகப் போராட்டத்தைக் கவனத்தில் எடுத்து, அதற்கு மதிப்பளித்து சம்பந்தப்பட்ட மாணவனை விடுதலை செய்தமை மேலும் சிலாக்கியமானது.

அதை விட, மாணவன் தவராசாவின் விடுதலை, பல்கலைக்கழக மாணவர்களின் ஒற்றுமைக்கும், ஒன்றித்த போராட்டத்துக்கும் கிடைத்த பெரு வெற்றியாகும். மாணவர் குரல் வலிமை மிக்கது என்பதையும் அது நிரூபித்து விட்டது.

தென்னிலங்கையிலும் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டார்கள். தடுத்து வைக்கப்பட்டார்கள். அதனால் பல்கலைக்கழகங்களில் குழப்பங்கள் உருவாகின. அவை மூடப்பட்டன. மாணவர்களும் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தினர்.

அந்தப் போராட்டங்களும் வெற்றி அளித்தன. வெளிநாட்டு அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் இது விடயத்தில் முன்னின்று உழைத்து பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்க வகை செய்யும் சமரச நிலையை, சுமுக நிலையை உருவாக்கினர். சமரச உடன்பாட்டுக்கு ஏற்ப இன்னும் சில மாணவர்கள் விடுவிக்கப்பட உள்ளனர்.

எனினும் —

சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவது என்ற போர்வையில், மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதற்கு இடம் கொடுக்க முடியாது; கொடுக்கக் கூடாது என்று அரசாங்கமே உணரும் அளவுக்கு நிலைமை வளர்ந்திருப்பது நல்லது.

மாணவர் சக்தி உணரப்படவேண்டும். மாணவர் போராட்டங்கள் பல நாடுகளின் அரசியல் தலைவர்களுக்கு தலையிடியைக் கொடுத்ததையும், ஆட்சியையே கவிழ்க்கும் அளவுக்கு நெருக்கடி நிலையை உண்டாக்கியதும் தெரியாதவை அல்ல. சீனாவும், பர்மாவும் இதற்கு நல்ல உதாரணங்கள்.

மாணவர் சக்தி மட்டுமென்ன பொதுவாக இளைஞர் சக்தியே வலிமையானது. அதனை உணர்ந்து கொள்ளாமல் நடக்கும் அரசுகளும் அதன் தலைவர்களும் அதிகாரிகளும் பெரும் அவதிப்பட நேரிடுவது உண்டு. இளைஞர் சக்தியை அடக்குமுறையால் வென்று விடலாம் அல்லது அடக்கி விடலாம் என்ற சித்தாந்தத்தைக் கடைப்பிடித்தவர்கள், நடைமுறைப் படுத்தியவர்கள் என்றுமே வென்றதில்லை. அந்தந்த நாட்டில் குழப்பத்தை உருவாக்கி இரத்த ஆறு ஓடச் செய்தும், அழிவுகளை உண்டாக்கியும் நாட்டையும் நாட்டு மக்களையும் குட்டிச் சுவராக்கியும் சிரழித்ததே கண்ட பலனும், முடிவும் ஆகும்.

இதனை இலங்கை அரசும் தலைவர்களும் ஓரளவு உணர்ந்து நடந்தால் தெற்கில் என்ன வடக்கில் என்ன அமைதியை நிலை நாட்டி விடலாம். தீவிரவாதமும், ஜனநாயகமும் ஒன்றோடு மற்றது ஒத்துப்போகாது என்று பேசித் திரிவதைவிட, இளைஞர் சக்திக்கு மதிப்பளித்து கௌரவப்பிரச்சினையை வீசி எறிந்து அழுங்குப்பிடியைத் தளர்த்தி ஓரளவு விட்டுக்கொடுத்து சமரசத்துக்கும் அதன் மூலம் அமைதிக்கும் வழி சமைப்பதே நல்லது. தெற்கிலும் வடக்கிலும் இன்றைய தேவையும் அதுவே!

### வடமராட்சியில் உணவு முத்திரை

வடமராட்சி ஆக 17

வடமராட்சியில் உணவு முத்திரை விநியோகம் நடைபெறுகின்றது. எனினும் சில இடங்களில் உணவு முத்திரைகளைப் பெறுவதில் மக்கள் ஆர்வம் காட்டாததால் கிராம சேவகர்களிடம் அதிகஅளவில் உணவு முத்திரைகள் தேங்கி உள்ளன என்று கூறப்படுகின்றது.

குழந்தைகளுக்கான உணவு முத்திரைகள் இம்மாத இறுதியில் வழங்கப்படும்.

அதற்கு பெற்றோரின் உணவு முத்திரையும் பிள்ளையின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரமும் அத்துடன் உறுதிப்பாட்டுக் கடிதம் ஒன்றும் கிராம சேவகர்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (இ-160)

ஆப்கனிஸ்தான் பிரச்சினைக்குத் தீர்வு:

# ஜெனிவா உடன்பாட்டை பாகிஸ்தான் மீறுவது விரும்பத் தகாத பல விளைவுகளை ஏற்படுத்தும்

## சோவியத் யூனியன் கடும் எச்சரிக்கை

மாஸ்கோ, ஆக. 16

ஆப்கன் சம்பந்தமான ஜெனிவா உடன்பாட்டை பாகிஸ்தான் அப்பட்டமாக மீறி வருவதை அமெரிக்கா அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று சோவியத் யூனியன் சுட்டிக் காட்டியிருக்கிறது.

பாகிஸ்தான் ஆப்கன் தொடர்பான ஜெனிவா உடன்பாட்டைத் தொடர்ந்து மீறினால் விரும்பத்தகாத பல விளைவுகள் ஏற்படும் என்று சோவியத் யூனியன் எச்சரித்துள்ளது.

நேற்று மாஸ்கோவில் சோவியத் யூனியன் வெளியிட்ட அறிக்கையில் இவை தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆப்கன் தீர்வு பற்றிய ஜெனிவா உடன்பாட்டில் அமெரிக்காவும் ஓர் உத்தரவாதியாகக் கையெழுத்து இட்டு உள்ளது.

பாகிஸ்தான் உடன்பாட்டைப் பகிரங்கமாக மீறி வருகிறது. உத்தரவாதியான அமெரிக்கா அதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இப்படித் தொடர்ந்து இருக்க முடியாது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா இதுபற்றி எடுத்துச் சொல்ல வேண்டும்.

இப்படி சோவியத் அரசின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பொதுத் தேர்தலுக்கு முன்னர் இஸ்லாமிய நீதிமன்றங்கள்

## அதிபர் ஸியா அறிவிப்பு.

இஸ்லாமபாத், ஆக 16

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் இஸ்லாமிய நீதிமன்ற அமைப்பு முறை நாட்டில் அமுலுக்கு வந்து விடும் என்று பாகிஸ்தான் அதிபர் ஸியா - உல் - ஹக் அறிவித்தார்.

பாகிஸ்தானின் சுதந்திர தினத்தை ஒட்டி நாட்டு மக்களுக்கு விடுத்த உரையில் அதிபர் ஸியா இதனைத் தெரிவித்தார்.

இஸ்லாம் பாகிஸ்தானில் உயரிய இடம் வகிக்கும்

தனிமனித வாழ்வு தொடக்கம் அரசியல் வரை இஸ்லாமிய நெறிக்கு உட்பட்டதாகவே அமையும் என்றும் அதிபர் ஸியா தெரிவித்தார்.

இதனிடையில் நவம்பர் 16 இல் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் அரசியல் கட்சிகள் பேட்டியிட அனுமதிக்கப்படவேண்டும் என்று கோரி மக்கள் இயக்கம் ஒன்றை நடத்தப்போவதாக எதிர்க்கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளன (எ)

### நிவாரணம்

கார்ட்டூம், ஆக. 16

பலத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் சூடானில் சுமார் 15 லட்சம் மக்கள் வீடிழந்து அகதிகளாகியுள்ளனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

பிரிட்டன், அமெரிக்கா உட்பட பல ஐரோப்பிய நாடுகள் நிவாரண உதவிகளை அனுப்பியுள்ளன. (எ)

### ரயில் விபத்தில் 16பேர் பலி!

ஒஸ்லோ, ஆக.16

நோர்வே நாட்டில் நேற்று இடம்பெற்ற ரயில் விபத்து ஒன்றில் 16பேர் கொல்லப்பட்டனர். (எ)

### தேவகௌடா அமைச்சரானார்!

பெங்களூர், ஆக 16

திரு. எஸ் ஆர். பொம்மை தலைமையிலான கர்நாடக அமைச்சரவையில் திரு தேவகௌடாவும் இடம் பெற்றிருக்கிறார். பதவி விலகிய ராமகிருஷ்ண ஹெக்டேயுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தவர் திரு தேவகௌடா. இதனால் ஜனதாக்கட்சி பிளவுறும் அபாயமும் ஏற்பட்டது. (எ)

### பர்மாவில் மீண்டும் கிளர்ச்சி

ரங்கூன், ஆக. 16

பர்மிய அரசுத் தலைவர் பதவியிலிருந்து விலகிய திரு. சின்லின்னை மக்கள் நீதிமன்றம் விசாரணை செய்யவேண்டும் என்று கோரி, அரசு எதிர்ப்புக் குழுக்கள் மீண்டும் பர்மாவில் கிளர்ச்சி நடத்துகின்றன.

வெளி உலகில்

# பல கோடி ரூபா செலவில் நிகழும் நிவாரண வேலைகள்

## புதிய திட்டம் அமுலாகும் போது மேலும் ஏராளமானோர் பயன் அடைவர்

இதுவரை நடைபெற்ற — இனி நடைபெறப்போகும் நிவாரணப் பணிகள் தொடர்பாக யாழ் மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. வை. மு. பஞ்சலிங்கம் விடுத்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

1987 ஆம் ஆண்டில் பாதுகாப்புப் படையினரால் யாழ் மாவட்டத்தில் அதிக அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் பொதுமக்கள் பெருமளவில் பாதிப்படைந்துள்ளனர்.

குடும்ப அங்கத்தவர்களை இழந்தவர்கள், உடல் உறுப்புக்கள் பாதிப்பு அடைந்தவர்கள். தொழில் நிலையங்களும் தொழில்களும் இழந்தவர்கள் என இவர்கள் பலவித பாதிப்புகளுக்கு உள்ளானார்கள்.

ஒரு சில இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் இருந்தவர்கள் எல்லாம் தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினார்கள். இதனால்ஒழுங்கான வாழ்க்கை நிலை பாதிப்படைந்தது.

இந்த நிலைமையை உணர்ந்து மக்களுக்கு உணவு கிடைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் உணவு விநியோகத்துக்கு என்னால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

மே மாதத்தில் வடமராட்சிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளை தொடர்ந்து ஜூன் ஜூலை மாதங்களில் 6 கிழமைக்கு இலவச உணவை அப்பகுதி மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இதே வேளை யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கும் ஒரு கிழமைக்கு இலவச உணவு விநியோகிப்பதற்கு வழி செய்யப்பட்டது.

### கஷ்டங்களின் மத்தியில் விநியோகம்

பின்னர் அக்டோபரில் இடம் பெற்ற நடவடிக்கையினைத் தொடர்ந்து நவம்பர் டிசம்பர் மாதங்களில் ஒரு குடும்பத்துக்கு 5 கிலோ அரிசி என்ற வீதத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள குடும்பங்கள் அனைத்துக்கும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த விநியோகம் மேற்கொள்ளப்பட்ட போது களஞ்சியத்தில் இருந்து அரிசியை எடுத்து வருவதற்கு லொறிகளை பெற்றுக் கொள்வது பெரும் சிரமமாக இருந்தது.

ப.நோ.கூ. சங்கங்கள் பாதிக்கப்பட்டு இயங்க முடியாது இருந்ததால் விநியோகத்தை அவர்கள் மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

ஊரடங்கு உத்தரவு முழுமையாக நீக்கப்படாது இருந்ததினால் தூர இடங்களுக்கு அரிசியைக் கொண்டு செல்வதில் ஊழியர்கள் முழுமூச்சுடன் ஈடுபட முடியாது இருந்தது.

இத்தனை கஷ்டங்களுக்கு மத்தியிலும் லொறிச் சொந்தக்காரர்களின் ஒத்துழைப்பாலும் இயங்கிய ப.நோ.கூ. சங்கங்கள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் சேவையாலும், சேவை மனப்பான்மை மிக்க ஊழியர்களின் ஒத்துழைப்பாலும் அரிசி விநியோகத்தை வெற்றிகரமாக செய்து முடிக்க முடிந்தது.

இதன் பின்னரும் மக்கள் தங்களின் பொருளாதார நடவடிக்கைகளைத் தொடங்க முடியாது இருந்தார்கள் என்பதனையும் உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதனையும் கருத்தில் கொண்டு யாழ். மாவட்டத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் சில கிழமைகளுக்கு இலவச உணவை பங்கீட்டு முறையில் வழங்க வேண்டும் என அரசாங்கத்தை வற்புறுத்தினேன்.

இதற்கு அரசாங்கத்தின் ஒப்புதல் பெற முடிந்ததினால் டிசம்பர் மாத நடுப் பகுதியில் இருந்து நான்கு கிழமைகளுக்கு அனைவருக்கும் இலவச உணவைப் பங்கிட்டு முறையில் விநியோகிக்க ஏற்பாடு செய்தேன்.

1988 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் இந்த விநியோகத்தை செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டது.

(மிகுதி நாளை வெளிவரும்)

## சமய சந்நிதிகளில்

### வெண்காடு சித்திவிநாயகர் உற்சவம்

வடமராட்சி, ஆக 17

மண்டைதீவு திரு வெண்காடு சித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

பன்னிரண்டு நாட்கள் தொடர்ச்சியாகத் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

கொடியேற்றம் ஆரம்பமாகி எட்டாம் நாள் வியாழக்கிழமை மாலை 3.45மணிக்கு வேட்டைத் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை ரதஉற்சவமும் நடைபெறவுள்ளன.

27ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்த உற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமைகாலை7.00மணிக்கு விஷேச பூசைகளும் நடைபெறும். (இ-160)

### நெடியகாட்டு பிள்ளையார் உற்சவம்

வடமராட்சி, ஆக. 17

வல்வை நெடிய காட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை 18ஆம்திகதி வியாழக்கிழமை பகல் 11 00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

பதின்மூன்று நாட்கள் தொடர்ச்சியாகத் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

ஆறும் நாள் செவ்வாய்க்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும், வியாழக்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

# தொல்லை வினை தீர்க்கும் நல்லைக்கந்தன்

பூ. க. இராசரத்தினம்

ஈழவள நாட்டில் முருகன் ஆலயங்கள் பல உள. இவற்றுள் சரித்திரப் பிரசித்தி பெற்று சிறப்பாக விளங்குகின்ற முன்னணி ஆலயங்களுள் நல்லூர் கந்தசுவாமி கோயில் ஒன்றாகும்.

தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தன் தன்னைக் கைதொழுவார்க்கு இல்லை எனாது வரம் ஈந்தருள் புரிவான் என்பது ஆன்றோர் நம்பிக்கை.

ஆரியச்சக்கரவர்த்திகள் பதினன்காம் நூற்றாண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்தனர். அவர்கள் நல்லூரை இராசதானியாக்கினார்கள். கோட்டை அரசன் ஆறும் பராக்கிரம பாகு செண்பகப் பெருமாளை யாழ்ப்பாணம் மீதுபடையெடுக்க வைத்தான். கி. பி. 1450ஆம்ஆண்டில் செண்பகப் பெருமாள் ஆரியச் சக்கரவர்த்தியை வென்று நல்லூரை இராசதானியாக்கினான்.

இவன் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு என்ற பெயருடன் 17 வருடங்களாக ஆண்டு வந்தான். இவ்வரசனே முதன் முதல் நல்லூர் கந்தசுவாமி கோவிலைக் கட்டியதாக சரித்திர அறிஞர்கள் கூறுகின்றனர்.

கி. பி. 1478 ஆம் ஆண்டளவில் பரராசசேகரன் கோயிலுக்கு அண்மையில் ஓர் ஏரி தோண்டி யமுனா நதியின் தீர்த்தத்தைக் காவடிகளில் கொண்டு வரச் செய்து அவ்ஏரிக்குள்ளே பெய்வித்து அதனை யமுனா ஏரி எனப் பெயரிட்டு அழைத்தான்.

இன்றும் இவ் ஏரியைக் காணலாம். பரராசசேகரன் இந்தக் கோயிலின் கிழக்குத் திசையில் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயத்தையும் மேற்குத் திசையில் வீரமாகாளியம்மன் கோயிலையும், வடதிசையில் சட்டநாதர் கோயிலையும், தென் திசையில் கைலாசநாதர் கோயிலையும் கட்டுவித்து தன் தலைநகரைச் சிறப்படைய வைத்தான்

27ஆம் திகதி சனிக்கிழமை ஊறணிச் சமுத்திர தீரத்தில் தீர்த்த உற்சவமும் மறுநாள் திங்கள் வசந்த உற்சவமும் நடைபெறும்

2ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் விசேஷ பிராயச்சித்த அபிஷேக பூஜையுடன் விழா நிறைவுபெறும்.(இ-160)

என முதலியார் இராசநாயகம் தமது நூலிற் கூறியுள்ளார்.

பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். இவர்கள் நல்லூர் கந்தசுவாமி கோயிலைத் தரைமட்டமாக்கி அது இருந்த இடம் தெரியாது செய்துவிட்டனர். இவர்

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

களுக்குப் பின் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தனர். ஆரம்பத்தில் சமய சுதந்திரம் கிடைக்கவில்லை.

எனினும் அவர்களுடைய ஆட்சியின் இறுதிக்காலத்தில் 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கோயில் தோன்ற வாய்ப்புக் கிட்டியது. இரகுநாத மாப்பாண முதலியார் ஒரு சிறு மடாலயத்தை நல்லூரிலே ஸ்தாபித்தார். இங்கு வேலை ஸ்தாபித்து பூஜை செய்து வந்தனர். புராணங்கள் ஆண்டுதோறும் படித்துப் பயன் சொல்லும் மடாலயமாக இது விளங்கியது. இரகுநாத முதலியாரின் வழித்தோன்றல்களே இக்கோயிலை இன்று பரிபாலித்து வருகின்றார்கள். சிறந்த சைவசீலர்களால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் ஏற்கப்பட்டு கோயில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இன்று கோயில் நல்ல சூழலில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்கு பூஜைகள், அபிஷேகங்கள், திருவிழாக்கள், நித்திய நைமித்தியங்கள் யாவும் குறிப்பிட்ட கால நேரம் தவறாது கிரமமாக நடைபெறுவது ஒரு தனிச் சிறப்பாகும். இந்த ஒழுங்கு முறையினை ஏனைய கோயில்களும் பின்பற்றுவது விரும்பத்தக்கதாகும்.

நல்லூரில் கொடியேற்றம், மஞ்சத்திருவிழா, கைலாசவாகனத்தில் முருகன் வீதிவலம் வரும் விழா தண்டாயுதபாணி உற்சவம், சப்பறத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தோற்சவவிழா, பூங்காவனத்திருவிழா, ஆகியவை பல்லாயிரக் கணக்கான பக்தர்களைப் பரவசப்படுத்தும் பக்தி நிறைந்த விழாக்களாகும்.

நல்லூர் முருகன் புகழைப் புலவர்பலர் காலத்துக்குக் காலம்பாடியுள்ளனர். இருபாலை (கோப்பாய்)சேனாதிராசாமுதலியார் வல்வெட்டி குமாரசாமி முதலியார் போன்றோர் தனிப்பிரபந்தங்களும் இயற்றியுள்ளனர். 'நல்லூர் கந்தர்' பதிகத்திலுள்ள பாடல்களில் ஒன்று வருமாறு;

'காவடி எடுப்பார் சிலர்
பாவடி தொடுப்பார்
சிலர்,
கால்பசி யடக்கிபொருமுக்காலு மிருப்பர் சிலர்,
வேலவ முருகப் பிணிகாயெனவுரைப்பர் சிலர்
பேர் சேவடி துதிப்பர்
சிலர்
சாமரை யெடுப்பர்
சிலர் தேமலர்
தொடுப்பர்,
சில பேர்.........''

''முருகா அடைக்கலம் கந்தா அடைக்கலம்'' என்று பல முறைவணங்கி வந்த மக்களுக்கு, அவர்கள் அகதிகளாக்கப்பட்ட போது (கடந்த ஆண்டு பிற்பகுதியில்) முழுமையான அடைக்கலம் நல்லூரான் தந்தமையைத் தமிழினம் என்றும் மறக்க முடியாது. எனவே நாம் கந்தனுக்கு சிரம் தாழ்த்தி கரம் கூப்பி 'வேல் வேல் வெற்றி வேல், துள்ளி வருகுது வீரவேல்' எனத் துதி பாடுவோமாக. ★

### சிறப்புற நடந்த பரலோக மாதா உற்சவம்

குருநகர், ஆக 16

நாவாந்துறை, புனித பரலோக மாதா ஆலய வருடாந்த நவநாள் கொண்டாட்டங்கள் நேற்றுச் சிறப்பாக நடைபெற்றன.

நேற்றுக் காலை 7 மணிக்கு திருநாள் கூட்டுப் பாடல் திருப்பலி, பங்குத் தந்தை வண பிதா, சாள்ஸ் ஜீ. செந்தில் வேல் அடிகளால் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மேற்படி கூட்டுத் திருப்பலியில் அருட்திரு கே.டி. சந்தியாப்பிள்ளை, அருட்திரு அன்ரன் மத்தாயஸ், அருட்திரு விக்டர் ஜெபசிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மாலை 4 மணிக்கு தேவதாயின் திருச்சொரூபம் அழகிய தேரில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது

(ஓ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகட்டிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறந்த வர்ண நிழற்படச் சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# உதயன்

17 - 08 - 1988 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக சிறப்புகளுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**POLY INSTITUTE**
( Muthliyar Centre )
**K.K.S. Road, Tellippalai.**

# 89-90 A/L
## விஞ்ஞான வகுப்புக்கள்

**ஆரம்பம்: 19-08-88 (வெள்ளி)**
காலை 8.15 மணி

யாழ் நகரின் விஞ்ஞானப் பிரிவின்
முன்னணி ஆசிரியர்கள்
ஒன்றிணைந்து கற்பிக்கின்றார்கள்.

| | |
|---|---|
| PHYSICS | — திரு. வர்ணம் |
| CHEMISTRY | திரு. தில்லைநாதன்<br>திரு. மக்லி |
| BOTANY | திரு. குகாதரன்<br>திரு. செல்வநேசன் |
| ZOOLOGY | — திரு. நாகநாதன் |
| PURE<br>APP | திரு. கிருஷ்ணு |

(C 6224)

## ஆரம்ப ஆசிரியருக்கான சேவை முன் பயிற்சி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 17

ஆரம்ப ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான சேவைக்கால முன் பயிற்சிகளுக்கு உரிய விரிவுரைகள் நாளை ஆரம்பமாகும்.

ஆயினும் சம்பந்தப்பட்டவர்கள் இன்று பிற்பகல் 3 மணிக்கு தமக்கெனஒதுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு சமுகம் தரவேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அவ்வாறுக வரும்போது தமக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்ட, 3 வாரங்களுக்கு தங்குவதற்குத் தேவையான பொருள்களுடன் வரவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தெற்கில் பதற்ற நிலை----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நிலை (தமிழ்ப்பகுதிகள் தவிர்த்து) நாடு முழுவதிலும் ஏற்பட்டிருக்கிறது.

இதே வேளை அரசாங்கம் பந்தோபஸ்த்து நடவடிக்கைகளைப் பலப்படுத்தி இருக்கிறது. குறிப்பாக நகரங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

### பரீட்சை

தற்போது நடைபெற்று வரும் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையின் இன்றைய, நாளைய பாடங்கள் தென்பகுதியில் நடைபெறுமா என்ற சந்தேக நிலையும் எழுந்துள்ளது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி நடைபெற இருந்த பரீட்சை அன்றைய ஹர்த்தால், ஊரடங்கு ஆகிய வற்றின் காரணமாக இன்று நடைபெறுவதற்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

ஆனுல் இந்தப் பரீட்சை இன்றும் தென்பகுதியில் நடைபெருது போகலாம் என்ற ஐயம் எழுந்துள்ளது.

### போக்குவரத்து இல்லை

இதேவேளை-

இன்றும் நாளையும் வடபகுதியிலிருந்துவவுனியாவிற்கு அப்பால் எந்தவித போக்குவரத்துச் சேவைகளும் நடைபெறமாட்டா.

தென்னிலங்கை தீவிரவாத இயக்கமான ஜே. வி. பி. இந்த இரு தினங்களும் தென் பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டுகோள் விடுத்துள்ளதை அடுத்தே இந்தப் போக்குவரத்துத் தடை ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய வ. பி. போ. சபையின் சாலைகள் தங்களது சேவைகளை வவுனியா மட்டுமே நடத்தும் என அந்தச் சபையின் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதே வேளையில் நேற்று வவுனியாவிற்கு அப்பால் செல்லும் தனியார் பஸ்களுக்கான டிக்கெட் பதிவுகளும் நடைபெறவில்லை. 19 ஆம் திகதிக்கான டிக்கட்டுகளே நேற்று வழங்கப்பட்டன. (ஒ-9)

## திருமலையில்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெடிப்புச் சம்பவத்துக்கு பழி வாங்கல் நடவடிக்கையாக இது இருக்கலாம் என்று கருதப்படுவதாகப் பி.பி.சி.வானொலி தெரிவித்தது.

வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம் என்று நகர மக்களை இராணுவம் எச்சரித்தபடியால் நேற்றுப்பகல் நகர வீதிகளில் நடமாட்டமே காணப்படவில்லை என்றும்தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை- அரச ஊழியர் வேலைக்குச் சென்று கொண்டிருந்த போது இக்குண்டு வெடித்ததாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-ஒ-எ)

## ஆசிரியர்-----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பர் தனித்தனிக் காசோலையை ஆசிரியர்களுக்கு வழங்குவார்.

இப்புதிய நடவடிக்கையின் பிரகாரம்தற்போது ஆசிரியர்களுக்கு கல்வித் திணைக்களத்தினுல்தனித் தனியாக சம்பளம் காசோலையாக வழங்கப்படும் முறை நீக்கப்பட்டுள்ளது. (அ-21)

## வெளிவந்துவிட்டது!

5ஆம் ஆண்டு புலமைப் பரிசிலுக்கும்
6ஆம் ஆண்டு அனுமதிப்
பரீட்சைக்கும் உரிய

# கணிதமும் - தமிழும்

புதிய சிபார்சுக்கு அமையத் தயாரிக்கப்பட்டது. மாணவரின் மனதிற்கும், கண்களுக்கும் குளிர்ச்சி தந்து, கல்வியில் ஊக்கம் கொள்ளத் தக்க புதிய உத்திகள் அடங்கிய தயாரிப்பு.
அழகிய அச்சில் அமைந்துள்ள
அற்புத படைப்பு!

வெளியிடுவோர்:
**கமலா பப்பிளிக்கேசன்ஸ்**
மட்டுப்படுத்தப்பட்ட பிரதிகளே
வெளியிடப்பட்டுள்ளதால்
உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்!
சகல புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்.
(5797)

## யாழ்----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நொச்சி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் மரணமடைந்தவர்கிளிநொச்சி ஆரும் வாய்க்காலைச் சேர்ந்த பொன்னுச்சாமி எனத் தெரிவிக்கப்பட்டது.

காரைநகர் டிப்போவுக்குச் சொந்தமான பஸ்ஸே விபத்தில் சிக்கியது.

காயமடைந்தவர்களில் ஒருவரான கந்தையா அருமைத்துரை (வயது 54) யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்,

விபத்து நடந்த இடத்துக்கு விரைந்த அமைதிப்படையினர் மக்களுக்கு உதவும் பணியில் ஈடுபட்டனர். (ஒ 51-10)

"ஷப்ரு" கிண்ணம்:

## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஆக 17

"ஷப்ரு" கிண்ணத்திற்காக யாழ். ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் "ஷப்ரு" கிரிக்கெட் அணியை எதிர்த்து யாழ் நொதேர்ன் விளையாட்டுக்கழக அணி மோதும்.

இந்தப் போட்டி இன்று பிற்பகல் 1 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (க)

## தேடுதல், கைது------

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

லில் உள்ளவர்கள் பலவகையான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர் எனப் புகார் கூறப்படுகிறது.

தாக்கப்பட்டவர்களில் சே. லட்சுமணன் (32 வயது) என்பவர் இப்போது திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### நகரில்

இதே வேளை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களை விடுதலை செய்யக்கோரி திருமலையில் இம்மாதம் பத்தாம் திகதி ஒரு நாள் அடையாள உண்ணுவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

சுமார் நூற்றுக்கும் அதிகமான ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் சுலோக அட்டைகள் தாங்கிய வண்ணம் இந்த அடையாள உண்ணுவிரதத்தில்கலந்து கொண்டனர்.

டொக்யாட்வீதியிலுள்ள நெல்சன் படமாளிகைக்கு முன்னுலுள்ள திறந்த வெளியில் இந்த உண்ணுவிரதம் காலை முதல் மாலைவரை மேற்கொள்ளப்பட்டது.

இந்திய அமைதிப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். காலையில் இலங்கைப் பொலீஸார் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்தனர். சிறிது நேரத்தின் பின்பு இந்தியப்படையினர் பொலீஸாரை அகற்றிவிட்டுத் தாம் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (அ-ஒ 150)

## புலிகளைக் கைது------

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

(தி. மு. க.) தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகள் கைது செய்யப்பட்ட விவகாரத்தை எழுப்பினுர்.

அவர் சொன்னதாவது:—

தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளை ராஜீவ் காந்தியின் அரசு கைது செய்து இருக்கிறது.

### கைக்கூலி

ஜெயவர்த்தனுவின் கொலைவெறிக்கு ராஜீவ் அரசு துணையாக கைக்கூலி வேலை பார்க்கிறது. மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றுவந்த விடுதலைப்புலிகளும் கைது செய்யப்பட்டு இருக்கிறுர்கள். தமிழ் நாட்டில் நடைபெற்ற சில சமூக விரோத செயல்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று பொலீஸ் அதிகாரிகளே அறிக்கை கொடுத்திருக்கிறுர்கள்.

### புரட்சி வெடிக்கும்

பிரபாகரனைக் கொன்று அவரை ஒழித்துக்கட்ட இந்திய அரசு திட்டம் தீட்டிவிட்டது. அதற்கு முன் ஏற்பாடாகத்தான் தமிழ் நாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டு இருக்கிறுர்கள். அவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும் இல்லாவிடில் தமிழ் நாட்டில் புரட்சி வெடிக்கும்-என்று அவர் கூறினுர். (ஒ-4)

## ஈரோஸ்......

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டப்பட்ட பின்னர் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஈரோஸ் இயக்கத்தின் அலுவலகங்கள் திறக்கப்பட்டன.

அதை அடுத்து தமிழ் நாட்டில் இயங்கி வந்த அநேகமான அலுவலகங்கள் மூடப்பட்டன.

இப்போது நெருக்கடிகள் கூடி வருவதால் கடைசியாக கோடம்பாக்கத்தில் மட்டும் இயங்கி வந்த அலுவலகமும் மூடப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது (ஒ-10)

## J. M. SABARATNAM

(Retired Additional G. A)

Funeral Service

A Service for the Late Mr. J. M. Sabaratnam who passed away in U. K. will be held at St. Johns Church, Chundikuli on 19-8-88 Friday at 3. 30 p. m, to coincide with the funeral service in U. K. on the 19th of August.

Friends and relations please accept this intimation.

**Dr. A. K. BLACK.**

(5813)

# மரண அறிவித்தல்கள்

## விஞசித்தம்பி இராஜபாக்கியம்

(ஒலி ஒளி அமைப்பாளர்)

வண்- வடமேற்கு பத்திரகாளி கோவிலடி யாழ்ப்பாணம் விஞசித்தம்பி இராஜபாக்கியம் 16- 8- 88 ல் காலமாகி விட்டார். இவர் காலம் சென்ற விஞசித்தம்பி, துரையம்மா அவர்களின் அன்பு மகனும் பவானி தேவியின் அன்புக் கணவரும் சச்சிதானந்தன், இராஜசுலோசனு, பவானந்தன், பிரபானந்தன், இராஜமோகனு, கிருபானந்தன் இவர்களின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற வடிவேலு மணியம்மாவின் சகோதரரும் உதயச்சந்திரன், (உதயன் சவுண்ட் சேவிஸ்) சந்திரசேகரம் (வேல் சன்ஸ், ஸ்ரான்லி ரேட்) குணசேகரம், ஆகியோரின் சகோதரரும், வடிவேலு (வேலழகன் வேக்சொப் சுன்னுகம்) மைத்துனரும் ஆவார்.

அன்னுரின் இறுதிச்சடங்கு 17- 8- 88இன்று காலை 10 மணிக்கு நடைபெறும், இத் தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்-;
பிள்ளைகள்

(5806)

## திரு. சில்வேஸ்டர் - டேனிஸ்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

திரு. சில்வெஸ்டர்- டெனிஸ் காலமானுர். இவர் சுகிர்தத்தின் அருமைக் கணவரும், ஜோ (U . K), றெக்ஸ் (U . K), அருந்ததி (முன்னுள் ஆசிரியை St. Bridget's). அன்ரன் (Australia) ஜெனி (முன்னுள் ஊழியர் [Ceylon Cold Stores), சாவித்திரி [மாணவி Holy Family Convent] ஆகியோரின் அன்புத் தந்தையும், அல்பிரட் U . K, காலஞ்சென்ற திருமதி லீன் பெனடிக்ற், றெஜி, மகாராஜா, தேவராஜா, ஆனந்தராஜா, அச்சில், சோதி ஆகியோரின் நேச சகோதரனும், ஜெருட் [The Finance Company Ltd) மஞ்சுளா [ U. K] ஆகியோரின் மாமனுருமாவார்.

அன்னுரின் பூதவுடல் 18. 8. 88 வியாழக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து புனித யுவானியார் (St John's) ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து ஆசனக் கோயில் சேமச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

42/4 கோவில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

[5812]

## முத்துக்குமாரு சின்னத்துரை

சாவகச்சேரியைச் சேர்ந்த முத்துக்குமாரு சின்னத்துரை 16-8-88ல் காலமானுர். அன்னுர் அன்னலட்சுமியின் கணவரும் சந்திரமணி, சந்திரலீலா, மனேகரன் (U. S. A.) ஸ்ரீதரன் சந்திரராணி (சுவீடன்) நிர்மலராஜன் (இத்தாலி) ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற செந்திவேல், கணபதிப்பிள்ளை, கௌரிதேவி, S.Jolander (சுவீடன்) ஆகியோரின் மாமனுரும் சுபேந்திரன், சுரேந்திரன், ரணேந்திரன், துஷ்யந்தி, பிரபாகரன் சுதாகரன், சத்தியா, தினகரன், பாஸ்கரன் தாரிணி, கஜன், அகிலன், துவாரகா ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 17-8-88 புதன்கிழமை மாலை 3 மணியளவில் 320, K. K. S வீதியில் நடைபெற்று கோம்பயன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
**S. ஸ்ரீதரன்**

(5815)

## ஆறுமுகம் பரமநாதன்

கொட்டடியைச்சேர்ந்த ஆறுமுகம் பரமநாதன்(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர்) 16-08-88 அன்று காலமானுர். அன்னுர் காலம்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், சோதிநாதன்(X-Ray Technician), ரகுநாதன்(U.K), கமலலோஜினி, கதிர்காமநாதன் (Jaffna M. P. C. S.), சிவநாதன் (West Germany) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலாம்பிகை, தர்மராணி, துரைராஜா (கலால் பொறுப்பதிகாரி), ரூபாதேவி, டோமணி ஆகியோரின் அன்பு மாமனுரும், ரவிச்சந்தர், குமுதினி, யுகேந்திரா, வித்யா, விஜிதா, பிறிந்தா, ரஜீவ், விஞேஜா ஆகியோரின் அன்புப் பாட்டாவும் ஆவார். அன்னுரின் பூதவுடல் 17-08-88 இன்று10.30மணியளவில் "மகேஸ் பவனம்" சோண்டாவில் வீதி இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக இருபாலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: **சோதிநாதன்.**

"மகேஸ் பவனம்"
சோண்டாவில் வீதி,
கோப்பாய்.

(5814)

## ஊர்காவற்றுறைப.நோ.கூ.சங்கம்
## ஊர்காவற்றுறை

# பகிரங்க ஏலவிற்பனை

எமது சங்கத்தில் பின்வரும் பொருட்கள் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்பட உள்ளன. விற்பனை 21-8-88 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

1. சிங்கர் தையல் மெசின்
2. வெற்றுத் தாரப் பீப்பாக்கள்
3. பாவிக்கப்பட்ட லொறி ரயர்கள். ரியூப்புகள்.
4. பாவிக்கப்பட்ட லொறி பற்றறிகள்.

## கேள்விப்பத்திரமூலம் பொருட்கள் விற்பனை

1. பெற்ருேமக்ஸ் உதிரிப்பாகங்கள்
2. சைக்கிள் உதிரிப்பாகங்கள்
3. நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்
4. றைக்ரர் உதிரிப்பாகங்கள்
5. இரும்புப் பொருட்கள்.

கேள்விப்பத்திரமூலம் பொருட்களைப் பெற்றுக்கொள்ளவிரும்புபவர்கள்சங்க வேலை நாட்களில் காலை 9-30—3.00 மணிவரை பொருட்களைப் பார்வையிடுவதுடன் கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிப்பவர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமாக ரூ. 250/- செலுத்தியிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் "பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை" என்று விலாசமிடப்பட்டு 20-8-88 சனிக்கிழமை பகல் 12.00 மணிக்கு முன் நேரடியாகத் தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும். 21-8-88 காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

பகிரங்க ஏலவிற்பனை மூலமும் கேள்விப்பத்திரமூலமும் பொருட்களை பெற்றுக்கொள்பவர்கள் 21-8-88 ஞாயிற்றுக்கிழமை அன்று தலைமைக் காரியாலயத்தில் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்வதுடன் அன்றைய தினமே பொருட்களை எடுத்துச் செல்லல் வேண்டும்.

பொது முகாமையாளர்.

ஊர்காவற்றுறை,
16-8-88.

C 6257

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 17- 08- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Wednesday 17th August 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org